இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-03 | 18-12-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-303



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (F-11516)

# யு.நி. அமுலாக்கம் பற்றியே முதலில் பேச்சு; ஆசிய நாட்டில் பேச்சு என்பது சதி முயற்சி

## ஐரோப்பாவில் ஆரம்பப் பேச்சு என்ற முடிவில் மாற்றம் இல்லை என சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுலாக்குவது பற்றிப் பேச நாங்கள் தயாராக இருக்கின்றோம். இப்பேச்சுக்கள் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெறவேண்டும். நோர்வே அனுசரணையாளராக இருப்பதால் அங்கு பேச்சுக்களை ஆரம்பிக்கலாம். இந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை. ஆசியநாடு ஒன்றில் பேசவேண்டுமென அரசாங்கம் வலியுறுத்துவது ஒரு சதி முயற்சி என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகங்களுக்கு நேற்று அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுடனான சந்திப்பின் பின் அவர் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார். அப்பேட்டியில் விபரம் வருமாறு;

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம்மிடம் கேட்டதற்கிணங்க இச்சந்திப்பு இடம்பெற்றது. இது நீண்ட நேரம் நடைபெற்றது. இதில் பல பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. முக்கியமாக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதுதான் அவர்களது நிலைப்பாடாக இருந்தது. இதனைத்தான் எங்கள் தலைவர் நீண்ட காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறார். தமிழ் கட்சிகள், மலையக கட்சிகள் மட்டத்திலான சந்திப்பின்போதும் தொடர்ந் தும் வலியுறுத்தி வந்திருந்தார். இந்த நிலையில் இவர்கள் இப்படியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதை நாங்கள் வர வேற்கின்றோம். இதற்கான பூரண ஒத்துழைப்பையும் நாம் வழங்குவோம் என்பதை அவரிடம் கூறியிருந்தோம்.

(10ஆம் பக்கம் பார்க்க)



இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானை அரசியல் துறைப்பொறுப்பாளர் வரவேற்கிறார். (படம் - லோகீசன்)

## 2ஆம் லெப். மாலதி நினைவிடம் சேதமாக்கப்பட்டமை; கோப்பாய் பிரதேச மக்கள் படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணிற்காகவும் மக்களிற்காகவும் தனது இன்னுயிரை ஈந்த முதல் பெண் மாவீரர் 2ஆம்லெப். மாலதி அவர்களின் நினைவுத்தூபி அமைக்கப்பட்டுள்ள இடத்திலுள்ள தூபி முகப்பு, பாதுகாப்பு வேலி என்பனவும் அங்கு நாட்டப்பட்டிருந்த தூண்கள் கதவுகள் என்பனவும் இராணுவ ஆக்கிரமிப்புப் படைகளால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மக்களை கடும் கோபத்திற்குள்ளாக்கியுள்ளது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என கோப்பாய் பிரதேச, பொங்கியெழும் மக்கள் படை தெரிவித்துள்ளது.

வெறும் பேனாமையினாலும் வார்த்தைகளினாலும் உனக்குச் சொல்லி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு



புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பாராட்டி பரிசில்கள் வழங்கியுள்ளார்.

குமுழமுனை, தண்ணீரூற்றுப்பு, அளம்பில் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த2005ஆம் ஆண்டு புலமைப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த மற்றும் கூடியபுள்ளிகளைப்பெற்ற மாணவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசாங்கத்தின் போக்குகள் இனவாத நோக்கம் கொண்டதாக உள்ளது

### கிளிநொச்சியில் ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

புதிய அரசின் போக்குகள் மாறுபட்டதாக இனவாத நோக்கம் கொண்டதாகவுள்ளது. மக்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது. இனவாதம் இப்போது இன்னும் வளர்ந்து கொண்டிருக்கின்றது என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நேற்றுகிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் புதிய சனாதிபதி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அதனால் அரசியல் சூழ்நிலை மாறியிருக்கின்றது. இந்தநிலையில் சிறுபான்மை மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி இன்றைய சந்திப்பில் கலந்துரையாடினோம் என்றார்.

தமிழ்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர வேண்டும் என்ற புதிய முயற்சியை

(12ஆம் பக்கம் பார்க்க)



## புங்குடுதீவு கடற்படை முகாமுக்கு அருகில் கிணற்றிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதியில் காணாமல் போன இளம் யுவதி கடற்படை முகாமுக்கு அருகில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே சென்று மீண்டும் வீட்டிற்குத் திரும்பவில்லை. இது சம்பந்தமாக ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்திலும் பெற்றோர் முறைப்பாடொன்றைச் செய் திருந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் குறிப்பிட்ட யுவதியை அப்பகுதியில் தேடியபோது இப் பெண் பாழடைந்த கிணற்றில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி தர்சினி (வயது - 20) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். குறிப்பிட்ட பாழடைந்த கிணறு புங்குடுதீவில் உள்ள கடற்படையினரின் முகாமுக்கு அருகாமையில் காணப்படுவதினால் இவர் கடற்படையினரால் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்டிருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த காலத்தில் இவ்வாறு புங்குடுதீவுப் பகுதியில் பெண்ணொருவரும் கடற்படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பிட்ட சடலம் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து புங்குடுதீவுப் பகுதியில் பெரும் பதற்றமான நிலைமை காணப்படுகின்றது.

(41)

## வரிவிளம்பரம்

**ஜோண் கல்வி நிலைய புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

2006ஆம் ஆண்டிற்கான தரம்3 தொடக்கம் தரம் 11 வரையான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. காலம்:- 20.12.2005 செவ்வாய்க்கிழமை பி.ப 3மணி நிர்வாகி புதுக்குடியிருப்பு.
(6956)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி

**Dreamweaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
தொடர்புகட்கு:
வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி
(சி.13074)

**SAAMS TECH**
இன் 5ஆவது
இலவச ஆங்கிலநேரடி வகுப்பு
இடம்,ரிம்மர் மண்டபம்
(யாழ் மத்திய கல்லூரிக்கு அருகில்) காலம்:17.12.2005 (இன்று) நேரம் 9.00-11.00. 11.00-1.00 2.00-4.00.4.00-6.00 ஏதாவது ஒரு வகுப்பில் கலந்து கொள்ளலாம்
NOTE:-49-60 வரையான பாடஅலகுகள் இலவசமாக வழங்கப்படும்.
அலுவலர்கள்,வியாபாரிகள் பாடசாலை மாணவர்கள்,வைத்தியர்கள்,ஆசிரியர்கள் பணிப் பெண்கள்,வீட்டுப்பெண்கள் யாவரும் கலந்து கொள்ளமுடியும்
TP-2229505, 4591571
(சி.13574)

## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபத்தில் புதிய அறிமுகம்

TVS




- லீற்றருக்கு 80 கி.மீ ஓடக்கூடியது.
- 12 லீ. கொள்ளத்தக்க பெற்றோல் தாங்கி.
- 125 சி.சி இயந்திர வலுக்கொண்டது.
- 2 வருட உத்தரவாதம்

உங்கள் உந்துருளி தெரிவுகளுக்கு முந்துங்கள்!

**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**
நாயகி கட்டடம், பரந்தன்,கிளிநொச்சி. தொ.பே:021-228 5072

## தமிழீழ நுண்கலைப் பிரிவினர்

தமிழீழத்தேசியத்தொலைக்காட்சிக்கென வாராந்த நிகழ்வாக வழங்கவிருக்கும் " இசை அரும்புகள்"

**பாடல் போட்டி**

புதியபாடகர்களை வெளிக்கொணரும் நிகழ்ச்சிக்கான விண்ணப்பம் கோரல்.

வயதெல்லை:- எட்டு (08) வயதிற்கு மேற்பட்ட எவரும் பங்குபற்றலாம்

தகுதி:- தங்கள் ஆர்வமே தகுதியாகக் கருதப்படும்

சுய விபரங்கள் அடங்கிய தங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் ஏதோ ஒரு முகவரிக்கு விரைவாக அனுப்பிவைக்கவும்.

- அதிபர், நுண்கலைக் கல்லூரி, கிளிநொச்சி.
- அதிபர், நுண்கலைக் கல்லூரி, முள்ளியவளை.
- அதிபர், நுண்கலைக் கல்லூரி, புதுக்குடியிருப்பு.
- அதிபர், நுண்கலைக் கல்லூரி, மல்லாவி.
- அதிபர், நுண்கலைக் கல்லூரி மன்னார்.

நுண்கலைப் பிரிவினர்
(சி.13579)

## கண்ணீரஞ்சலி



**அமரர்**
**திரு.அ.சி குணரட்ணம் (நாட்டுப்பற்றாளர்)**

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தை மீள்புனரமைப்புச் செய்து கிளிநொச்சி உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவரும் 2004 தமிழீழத் தேசியவிளையாட்டு விழாவிற்கான உதைபந்தாட்ட அணியை சிறப்பான முறையில் பயிற்றுவித்தவருமான
அமரர் திரு.அ.சி குணரட்ணம் (நாட்டுப்பற்றாளர்)
அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
19.12.2005 திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெறும் அஞ்சலி நிகழ்வுக்கு அனைத்து உதைபந்தாட்ட கழகங்களின் அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்**
(சி.13606)

## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்-வன்னி

### ஊர்தி உரிமையாளர்கள் பார்வைக்கு பொதுக்கூட்டம் பிற்போடல்

அன்புடையீர்:-
25.12.2005 ஆம் நாள் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு, வரும் 09.01.2006 ஆம் திகதியன்று நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

த.ஜெகதீஸ்வரன் (தலைவர்) அ.விஜயபாலகிருஸ்ணன் (செயலாளர்)
(சி.13577)

## 42ஸ்ரீ 2323 (இசுசு) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை

### 28.12.2005

பூநகரி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் 42ஸ்ரீ2323 ஆம் இலக்க பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியினை 19.12.2005 ஆம் திகதியில் இருந்து 24.12.2005 ஆம் திகதி வரை எமது காரியாலயத்திலும், 26:12.2005 ஆம் திகதியில் இருந்து 27.12.2005 ஆம் திகதி வரை கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்திலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் 28.12.2005 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு பரந்தன் சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

01) மீளளிப்பு முற்பணமாக ரூபா 1000/- வை செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.

02)தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையில் 25% த்தினை உடன் செலுத்துவதுடன், மிகுதிப் பணத்தினை மூன்று நாட்களுக்குள் செலுத்தி பாரவூர்தியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பூநகரி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்,
நாகதேவன்துறை வீதி,
வாடியடி, பூநகரி.
(சி.13376)

திரு.கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி, ப.நோ.கூ சங்கம்.

## ஆறாமாண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1979 - 03 - 13



வீரச்சாவு 1999 - 12 - 18

**கப்டன் வாதவூரான் (வினோத்)**
**முத்துலிங்கம்-மனோகரன் (சுதா)**
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)
*(நல்லூர் சாமிப்புலம் பூநகரி)*

எங்கள் இதயங்கள் அழுவதும்
அலைகள் அடிப்பதும் - உன்
மலர்வதன முகத்தைப் பார்ப்பதற்காய்
ஆண்டுகள் ஆறாய் மறைந்தாலும்
மறப்போமா உன் நினைவுகளை

இந்நாளில் அனைத்து மாவீரர்களையும் நினைவில் கொண்டு இன்று (18.12.2005) இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய உணவில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள் , உறவினர்கள் அனைவரையும் கோட்டுக் கொள்கின்றோம்

தகவல்:-
மு.மனோ
(தமிழீழ காவல்துறை)
(7100)

# விளையாட்டுத்துறைக்கு அரும்பணியாற்றிய குணரட்ணத்தின் பூதவுடல் கிளிநொச்சிக்கு



கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தை மீள் புனரமைப்புச் செய்து கிளிநொச்சி உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட பிரபல விளையாட்டுத்துறை நிர்வாகியான நாட்டுப்பற்றாளர் ஏ.எஸ் குணரட்ணம் (வயது- 68) நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார். இவரது பூதவுடல் நாளை கிளிநொச்சிக்கு கொண்டு வரப்படுகிறது.

உதைபந்தாட்டம், மெய்வன்மை மற்றும் கரப்பந்தாட்டம்ஆகிய துறைகளின் விளையாட்டு நிர்வாகத்தில் மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களில் உயர் பதவிகளை வகித்த மிகஎளிமையான மனிதரான குணரட்ணம். 2004 ஆம் ஆண்டு தமிழீழ தேசிய விளையாட்டு விழாவிற்கான உதைபந்தாட்ட அணியைச் சிறப்பான முறையில் பயிற்றுவித்தவராவார்.

குணரட்ணம் தொடர்பாக தமிழீழ விளையாட்டுத்துறை விடுத்துள்ள அஞ்சலியுரையில், சுகவீனம் காரணமாகச் சாவடைந்த வடக்கு கிழக்கு இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளரும் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறை வளர்ச்சியில் முன்னின்று பணிகள் புரிந்தவருமான நாட்டுப்பற்றாளர் குணரட்ணம் அவர்களுக்கு தமிழீழ விளையாட்டுத்துறை வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

தமிழீழ தேசிய விளையாட்டு விழா நிகழ்வுகளிலும் முன்னின்று உழைத்தவர் குணரட்ணம் தாயக கால்பந்தாட்ட வீரர்களின் மனங்களில் என்றுமே மறக்கமுடியாத அளவுக்குத் தனது பணிகள் மூலம் பங்களிப்பை வழங்கியவர் அவர் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான கரைதுறைப்பற்றுபிர தேச வி.போட்டி

மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட கரைதுறைப்பற்று பிரதேச போட்டிகள் நேற்று முன்தினம் செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக தமிழீழத் தேசியக்கொடியினை வற்றாப்பளை வலய அரசியல்துறைப் பொறுப்பாளர் கு.குமரன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து போட்டி நிகழ்வுகள் ஆரம்பமானது, முதல் போட்டியாக சந்திரன் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டு கழகத்தினர் போட்டியிட்டனர். இப்போட்டியில் சந்திரன் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றியீட்டினர். இரண்டாவது போட்டியில் மங்களேஸ்வரா விளையாட்டுக் கழகத்துடன் அலை ஓசை விளையாட்டுக் கழகத்தினர் போட்டியிட்டனர் போட்டியில் மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகத்தினர் வெற்றியீட்டினர்.மூன்றாவது விளையாட்டுக் கழகத்துக்காக நடைபெற்ற விளையாட்டுக் கழகங்களுக்கான போட்டியில் வித்தியா விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்து உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக் கழகத்தினர் மோதினர். இப்போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் தண்ட உதைமூலம் வெற்றிகள் தீர்மானிக்கப்பட்டன. இதில் 4-3 என்ற அடிப்படையில் அலை ஓசை விளையாட்டுக்கழகத்தினர் வெற்றியீட்டினர்.


இப் போட்டிகள் முல்லை. மாவட்ட விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் நிலான் தலைமையில் நடைபெற்றது.

# மூன்றாவது போட்டி இன்று



இலங்கை அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டி இன்று அகமதாபாத்தில் ஆரம்பமாகின்றது. இதில் இந்திய அணித்தலைவர் ராவிட் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால் இப்போட்டியில் கலந்து கொள்ள மாட்டாரென இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பேர்த் டெஸ்ட் கிரிக்கெட்போட்டி; அவுஸ்திரேலியா பதில் தாக்குதல்



அவுஸ்திரேலிய- தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் பேர்த்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்டில் பதில் தாக்குதல் நடத்திய அவுஸ்திரேலியா 296 ஓட்டங்களுக்கு தென்னாபிரிக்க அணியை ஆட்டமிழக்கச் செய்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியை முதல் இனிங்சில் 258 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச்செய்த தென்னாபிரிக்கா நேற்று விக்கெட் இழப்பின்றி 38 ஓட்டத்துடன் தொடர்ந்து ஆடிய போது பிரெட்லீயின் வேகத்திற்கு பணிந்ததுடன் ஷேன்வோர்னுக்கும் மூன்று விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

பிரெட்லீ அற்புதமாக பந்துவீசி ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இவர்களை விட மெக்ராத், பிரேக்கன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

துடுப்பாட்டத்தில் வில்லியர்ஸ், பௌச்சர் அரைச்சதங்களைப் பெற்றனர். வில்லியர்ஸ் 68, பௌச்சர்62, சிமித் 34, பிறின்ஸ் 28, பொலக் 34 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

இதனால் 38 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இனிங்சை ஆடும் அவுஸ்திரேலியா நேற்றைய ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. போட்டியின் மூன்றாம் நாள் இன்று.



# ஈராக் தேர்தல் சர்வதேச விதிகளுக்கு அமைய நடைபெற்றது என்கின்றனர் கண்காணிப்பாளர்கள்

(பாக்தாக்)

சர்வதேச தேர்தல் விதிகளுக்கமைய ஈராக் பாராளுமன்றத்தேர்தல்கள் நடை பெற்றுள்ளதாக சர்வதேசதேர்தல் கண்காணிப்பாளர்கள் பாராட்டியுள்ளனர்.



சிறுசிறுசம்பவங்களைத்தவிர தேர்தல் சுமுகமாக இடம்பெற்றதாக ஈராக்கில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சர்வதேசக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். இதனிடையே ஐநா. தூதுவருடனான சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஈராக்கானது தன்னைத்தானே பாது காத்துக்கொள்வதுடன் தன்னிச்சை யாகச் செயற்பட்டு பயங்கரவாதத் திற்கெதிரான தாக்குதல்களிற்கு அமெரிக்காவுடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் ஏனைய நாடுகளிற்கு ஈராக் ஒரு முன்னு தாரணமாகத்திகழ வேண்டுமெனவும் கூறியுள்ளார். இந்தத்தேர்தலில் 11 மில்லியன் வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகவும் இன்னும் இரண்டு வாரங்களில் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் எனவும் ஈராக் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# எரித்திரியாவின் உத்தரவையடுத்து ஐ.நா.அமைதிப்படை வெளியேறியது

நாட்டை விட்டு வெளியேறும்படி எரித்திரிய அரசாங்கம் விடுத்த உத்தரவைத்தொடர்ந்து ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மேற்கு நாடுகளைச் சேர்ந்த அமைதிப்படையினர் நேற்று முன்தினம் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

2000ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த இரண்டு வருடகால யுத்தத்தைத் தொடர்ந்து அமெரிக்கா,கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அமைதிப்படையினர் எரித்திரியாவில் இருந்துள்ளனர்.

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை கடந்த புதன்கிழமை விடுத்த அறிக்கையில் எரித்திரியாவில் சேவையாற்றிய இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் அயலிலுள்ள எதியோப்பியாவிற்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்னும் அறிவித்துள்ளது.

நூற்றுக்கும் அதிகமான இராணுவ அதிகாரிகள் சிவில் அதிகாரிகள் 20 மேலதிக ஊழியர்கள் இவ்வாறு வெளியேறியுள்ளனர்.

எதியோப்பியாவிற்கும் எரித்திரியாவிற்குமிடையிலான பொது எல்லையை உரியமுறையில் குறிப்பிடுவதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளதனால் விரக்தியடைந்த எரித்திரியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ரஷ்ய அணுமின் நிலையத்தில் பாரிய வெடிவிபத்து

(செயின்ட்பீற்றர்ஸ்பெர்க்)

ரஷ்ய அணுமின் நிலையத்தில் தாதுப்பொருளை உருக்கும் உலையில் திடீர் வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் மூன்று பேருக்கு பெரும் தீக்காயங்கள் ஏற்பட்டன.

ரஷ்ய நாட்டில் செயின்ட்பீற்றர்ஸ் பெர்க் நகருக்கு அருகே உள்ள லெனின் கிராடில் உள்ள மிகப்பெரிய அணுமின் நிலையத்தில் தாதுப் பொருளை உருக்கும் உலை ஒன்று உள்ளது. கடந்த வியாழன் இந்த உலையில் பாரிய வெடிவிபத்து ஏற்பட்டது. இதில் மூன்று பேருக்கு பெரும் தீக்காயங்கள் ஏற்பட்டன. இந்த வெடிவிபத்தையடுத்து அணுக்கதிர் வீச்சுக்கள் வெளியே பரவவில்லை.

அணுமின் நிலையப் பாதுகாப்பு விதிகள் எதுவும் மீறப்படவில்லை. அணுமின் நிலையக் கருவிகளின் செயற்பாட்டுத்திறன்கள் வழக்கமான நிலையிலேயே உள்ளன.

இந்த அணுமின் நிலையம் இரண்டாவது பிரிவு பராமரிப்புப் பணிகளுக்காக கடந்த யூலை மாதம் மூடப்பட்டது என்று ரஷ்ய அணுச்சக்தித்துறை தெரிவித்துள்ளது.

# ஆப்கான் பாராளுமன்றத்தைத் தகர்க்க முயற்சி முன்னமே தடுக்கப்பட்டதால் இலக்கு தப்பியது

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பாராளுமன்றத்தை தலிபான் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் மூலம் தகர்க்க முயன்றனர். எனினும் தற்கொலை வாகனம் இலக்கை நெருங்க முன்னமே பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டதால் வெடிகுண்டு வாகனத்தை ஓட்டிவந்த தீவிரவாதி அதனை வெடிக்க வைத்துள்ளார் ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி கடந்த 2001ஆம் ஆண்டு அகற்றப்பட்டது.அங்கு இப்போது அதிபர் அமீர் க்ர்சாய் தலைமையில் புதிய ஆட்சி நடைபெற்று வருகிறது.

அமெரிக்கப் படையினர் மறுசீரமைப்புப் பணியிலும், பாதுகாப்பு பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனாலும் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து ஆப்கான் அதிகாரிகள் மீதும் அமெரிக்கப்படை மீதும் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காபூல் நகரில் பாராளுமன்றத்தை தகர்க்க தலிபான் தீவிரவாதிகள் முயன்றனர். வெடி குண்டு நிரப்பிய காரை ஒரு தலிபான் தீவிரவாதி பாராளுமன்ற கட்டடத்தை நோக்கிஓட்டி வந்தார். அந்தக் காரை அமெரிக்க ரோந்துப் படையும் ஆப்கானிஸ்தான் பொலிசாரும் தடுத்து நிறுத்தினார்கள். உடனடியாக தீவிரவாதி கார்க் குண்டை வெடிக்கச் செய்தார்.

இதில் அந்தக் காரும் அமெரிக்கப் படையினர் வந்த வானும் வெடித்து சிதறியது. தற்கொலைப் படைத் தீவிரவாதியும் இரண்டு அமெரிக்கப் படையினரும் இதில் பலியாகி விட்டனர்.

பாராளுமன்ற கட்டடம் தப்பியது. இந்நிலையில் விரைவில் ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் நடைபெற இருக்கிறது.இதில் சுக்ரியா பராக்சாய் என்ற பெண்ணும்போட்டியிடுகிறார்.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற திருமலை மாவட்ட மாணவர்கள் கௌரவிப்பு

## தளபதி கேணல் சொர்ணம் பங்கேற்று சிறப்பிப்பு



திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இவ் வருடம் ஐந்தாம்தரம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி பாடசாலைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் விரு துகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர். விருது வழங்கும் இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தார். திருகோணமலை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 44 பாடசாலைகளைச் சேர்ந்த 71 மாணவர்கள் இவ்வாறு விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். இவர்களுடன் இவர்க ளுக்கு கற்பித்த ஆசிரியர்களும் விருதுகளைப் பெற்றுக் கொண்டனர். கடந்த வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு சேனையூர் மத்திய கல்லூரியில் இந் நிகழ்வு நடை பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட நிர்வாகத்துறை அலுவலகத்தின் முன்னால் இருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் மாலைகள் அணிவித்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பொதுச் சுடரினை திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இருந்து தோற்றி மாவட்ட மட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவனும், அவருக்கு கற்பித்த ஆசிரியை திருமதி வனஜா கணேசலிங்கமும் ஏற்றி வைத்தனர், தமிழீழ தேசியக் கொடியினை தலைமைச் செயலகத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் புதியவன் ஏற்றிவைத்தார். தமிழீழ மாணவர் அமைப்பின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் புரட்சி, திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து பாடசாலை மட்டங்களில் முதலிடத்தில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் பதக்கம் அணிவித்து விருதுகள் வழங்கிக் கௌரவித்தார்.

# சுடரொளி, தினக்குரல் நாளிதழ்கள் அதாவுல்லா குழுவினரால் எரிப்பு!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் அதாவுல்லா குழுவினரால் நேற்றுமுன்தினம் மதியம் அக்கரைப்பற்று பள்ளிவாசலுக்கு அருகில் விற்பனைக்கு வந்த சுடர்ஒளி, தினக்குரல் பத்திரிகைகளைப் பறித்து வீதியில் போட்டு எரித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கருணா குழுவில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரணடைந்தவர்கள் கருணா குழுவினருடன் அதாவுல்லாவின் தொடர்பினையும், அதாவுல்லாவின் ஆதரவுடனேயே பள்ளிவாசல் குண்டு வீச்சுச்சம்பவம் இடம்பெற்றது எனவும் தெரிவித்திருந்த செய்திகளைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்தமையினாலேயே தங்கள் மிலேச்சத்தனங்கள் மக்களுக்கு தெரியவந்துள்ள ஆத்திரத்திலேயே இந்த இரண்டு பத்திரிகைகளையும் அதாவுல்லா குழுவினர் தீ வைத்துள்ளனர் எனத்தெரியவருகின்றது.

# மருத்துவ சங்க நிர்வாகத் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மருத்துவ சங்கப் புதிய நிர்வாகக் குழுத்தெரிவு அண்மையில் நடைபெற்று புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

புதிய நிர்வாகிகளின் பெயர்விபரங்கள் பின்வருமாறு:- தலைவர் டாக்டர் இ.சதானந்தன், துணைத் தலைவர்கள் டாக்டர்.கா.சுஜந்தன், டாக்டர் சி.சிவதாசன், செயலாளர் டாக்டர்.சி.ஜீவா, துணைச் செயலாளர் டாக்டர் அ.திலீபன், பொருளாளர் டாக்டர் மா.குகராசா, நூலகலவியலாளர், நிர்வாக உறுப்பினர்கள் ஒன்பது பேரும், போசகர்களாக வைத்திய நிபுணர் ச.ஜெயகராசா, வைத்திய நிபுணர் றொபேட் பெஞ்சமின், அறுவை சிகிச்சை நிபுணர் நொபேட் ரெயிலர் டாக்டர் கே.நந்தகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மாயவனூரில் தீப்பந்த ஊர்வலம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டைக் கருத்திற்கொண்டு மாயவனூர்ப் பகுதி மக்களால் தீப்பந்த ஊர்வலம் ஒன்று திங்கட்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

மாயவனூர் பொதுமண்டபத்தில் இருந்து ஆரம்பமாகி சிவன் வீதிவழியாக கிருஸ்ணன் ஆலயத்திற்கு அருகாமை வந்தடைந்து மீண்டும் மாயவனூர் பொது மண்டபத்தைத் தீப்பந்த ஊர்வலம் வந்தடைந்தது.

இந் நிகழ்வு மாயவனூர் கிராமப் பொறுப்பாளர் திருமகன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தற்போதைய அரசியல் நிலைப்பாடு குறித்த "எமது தேசம் எமக்கு வேண்டும்", "எங்கள் தலைவர் வாழ்க" போன்ற கோசங்களை மக்கள் எழுப்பியவாறு ஊர்வலத்தில் பங்கேற்றனர். ஊர்வலம் முடிவடைந்ததும் சிறப்புரைகளை மாயவனூர் கிராமப் பொறுப்பாளர் திருமகன், தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் பொ.கந்தன், மாயவனூர் பிரதேச ஊரக வளர்ச்சிப் பணித்தலைவர் இ.யோகேந்திரராசா ஆகியோர் நிகழ்த்தினர். அத்தோடு தமிழீழ வீடியோத் திரைப்படங்கள் சிலவும் காண்பிக்கப்பட்டன. (12)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளமைப்பதில் இழுத்தடிப்பு

## முல்லை. திட்டமிடல் மேம்பாட்டு பொறுப்பாளர் தகவல்

(முல்லை)

**முல்லை. மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதாகக் கூறிய ஒன்பது அரச சார்பற்ற நிறுவனங்களும், இழுத்தடிப்புச் செய்து வருவதாக முல்லை. மாவட்ட திட்டமிடலிற்கும், மேம்பாட்டிற்குமான செயலகப் பொறுப்பாளர் யாழமுதன் தெரிவித்தார்.**

5464 வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டிய நிலையில் 241 வீடுகள் மட்டுமே தற்பொழுது வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதில் செம்மலை கிழக்குப் பகுதியில் 10 வீடுகளும், அளம்பில் வடக்குப் பகுதியில் 40வீடுகளும், அளம்பில் தெற்குப் பகுதியில் 16 வீடுகளும் உப்புவெளியில் 13 வீடுகளும், சிலாவத்தை தெற்கில் ஆறு வீடுகளும், சிலாவத்தையில் மூன்று வீடுகளும் ,கள்ளப்பாடு வடக்கில் 25 வீடுகளும், முல்லை பட்டினத்தில் ஐந்து வீடுகளும், முல்லை தெற்கில் எட்டு வீடுகளும், செல்வபுரத்தில் 41 வீடுகளும், வட்டு வாகலில் 12 வீடுகளும், முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் 31 வீடுகளும் முள்ளி வாய்க்கால் மேற்குப் பகுதியில் 12 வீடுகளும், வலயன் மடத்தில் ஐந்து வீடுகளும், அம்பலவன் பொக்கணையில் மூன்று வீடுகளும், மாத்தளனில் மூன்று வீடுகளுமாக 241 வீடுகளே தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலும், கூரை வரை அளம்பில் வடக்கில் எட்டு வீடுகளும், அளம்பில் தெற்கில் ஒரு வீடும், உப்புமா வெளியில் இரண்டு வீடுகளும், சிலாவத்தையில் ஒரு வீடும் முல்லை தெற்கில் மூன்று வீடுகளும், செல்வபுரத்தில் எட்டு வீடுகளும் வட்டுவாகலில் ஒரு வீடும் முள்ளி வாய்க்கால் கிழக்கில் இரண்டு வீடுகளும், வலயன் மடத்தில் ஒரு வீடும், மாத்தளனில் மூன்று வீடுகளுமாகக் கட்டப்பட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான இழுத்தடிப்பினால் சுனாமியினாற் பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிரந்தர வீடுகள் அமைப்பது மிகவும் தாமதமாகிச் செல்வதாகவும், அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களிற்கு குடியமர்த்துவதற்கு என இனங்காணப்பட்ட அரச காணிகளில் நில அளவை செய்து இதுவரை ஒரு தொகுதிக் காணி வழங்கப்பட்டுள்ளதாக யாழமுதன் தெரிவித்தார். அவர்மேலும தெரிவிக்கையில் வழங்கப்பட்ட காணிகளுக்குரியவர்கள் கடல் வலயத்துக்குள் இருந்து 200 மீற்றருக்கு உட்பட்டவர்கள் எனவும் தெரிவித்தார். இவர்களுக்கான காணிகள் வழங்கப்பட்ட போதும் அரசசார்பற்ற நிறுவனங்கள் வீடுகள் அமைப்பதில் தாமதங்கள் காட்டிவருகின்றதாகவும் தெரிவித்தார்.இதில் கள்ளப்பாடு வடக்கு, தெற்கு தீத்தக்கரை வடக்கு என்பன இணைந்து 241 பேருக்கு காணிகள் வழங்கியதாகவும் சிலாவத்தையில் 185 பேருக்கும் வண்ணாங்குளம் பகுதியில் 202 பேருக்கும் முள்ளிவாய்க்கால் கிழக்கில் 52 பேருக்கும் முல்லைத்தீவு தெற்கில் 54 பேருக்கும் அளம்பில் தெற்கில் 50 பேருக்கும், அளம்பில்வடக்கில் 45 பேருக்கும் உப்புமா வெளியில் 12 பேருக்கும் உடுப்புக்குளம் பகுதியில் 31 பேருக்கும் சிலாவத்தை தெற்கில் 303 பேருக்கும் முள்ளிவாய்க்கால் மேற்குபகுதியில் செல்வபுரம் மக்களுக்காக 105 பேருக்குமாக காணித்துண்டுகள் நில அளவை செய்து வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (20)

# சுயதொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் உதவியுடன் சுய தொழில் முயற்சிக்கான கடனுதவி வழங்கும் நிகழ்வு கோரக்கன்கட்டு கிராம அலுவலர் அலுவலகத்தில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன பிர்தேச இணைப்பாளர் செ.சுமித்திரா தலைமையில் நடைபெற்றது.

கோரக்கன்கட்டு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் தொழில்களின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார். பின் பெ.அ.பு நிறுவன திட்ட கண்காணிப்பாளர் க.றஞ்சினி திட்ட செயற்பாடு தொழில்களின் முககியத்துவம் தொடர்பான கருத்துக்களை வழங்கினார். தொடர்ந்து பயனாளிகளுக்கான கடனுதவியினை ச.பொ.அ.குழுத் தலைவர், கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவன உத்தியோகத்தர் றஜீபன், கிராம அபி விருத்தி சங்கத் தலைவர் ஆகியோர் வழங்கினர். இதில் பத்துப் பயனாளிகளுக்கு விவசாய செய்கைக்கு இரண்டு இலட்சம் ரூபா நிதிகடனாக வழங்கப்பட்டது.

# பேருந்து தரிப்பிடம் அவசியம்



(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சீரான பேருந்துத் தரிப்பிடங்கள் இன்மையால் மக்கள் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர். வட்டக்கச்சி சந்தைக்கு அருகாமையில் இருந்து கட்சன் வீதிச் சந்தி வரை ஐந்து பேருந்துத் தரிப் பிடங்கள் நிறுவப்பட்டிருந்தன. ஆனால் தற்போது மூன்று தரிப்பிடங்கள் தான் கட்டடமாகக் காணப்பட்டு வருகின்றன. இவையும் மக்கள் பாவிக்க முடியாத நிலையில் எச்சங்களுடன் ஆடு, மாடுகள் தங்கி வருகின்றன. மற்றைய தரிப்பிடங்கள் உடைந்து காணப்படுன்றன. கட்சன் வீதிச் சந்தியில் இருந்த பேருந்து தரிப்பிடம் எங்கு இருந்தது என்பது கூடத் தெரியாமல் போய் விட்டது. இத் தரிப்பிடத்திற்கு வரும் பிரயாணிகள் மரங்களின் கீழ் நின்றே ஓடி வந்து பேருந்தில் ஏறும் போது விபத்துக்கள் கூட இடம்பெற்று வருகின்றன.

அத்தோடு இப் பிரதேசத்திலேயே மக்கள் அதிகம் வாழ்ந்து வரும் இடத்தில் சீரான பேருந்து தரிப்பிடங்கள் இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கரையோரக் காவல்படையின் நான்காவது அணி பயிற்சி நிறைவு

தமிழீழ கடற்படையின் லெப்ரினன்ட் கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் கரையோர காவல்படையின் நான்காவது அணிக்கான பயிற்சி நிறைவு விழா கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பயிற்சியாளர் விஜிக்குட்டி தலைமையில் இடம்பெற்றது.

முதலில் நான்காவது அணி வீரர்களின் அணிவகுப்பு மரியாதை இடம் பெற்றது. அணிவகுப்பு மரியாதையினைத் தமிழீழக் கடற்படைத்தளபதி, மங்களேஸ், தமிழீழ கடற்படைத் துணைத்தளபதி செழியன், தமிழீழ கடற் படையின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் மா.ரங்கன், தமிழீழக் கடற் படையின் அளம்பிற்பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் அரவிந்தன் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து பொதுச் சுடரினை துணைத்தளபதி செழியன் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை தளபதி மங்களேஸ் ஏற்றினார். தொடர்ந்து லெப்ரினட் கேணல் திருவடியின் உருவப்படத்திற்கு தமிழீழக் கடற்படை முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். சிறப்புரையை துணைத்தளபதி செழியன் வழங்கினார். மற்றும் தொடர்ந்து பயிற்சியாளர்களுக்கிடையே நடாத்தப்பட்ட சூட்டுப்பயிற்சி, உட்பட பல போட்டிகளில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (20)

## யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட கிணற்று நீர் பற்றி ஆய்வு

யாழ். மாநகரசபையின் எல்லைகளுக்குட்பட்ட பகுதியில் இருக்கின்ற கிணற்று நீரின் இயல்புகள் பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

யாழ். மாநகரசபையின் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் இந்தக் கிணற்று நீர்பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் படிப்படியாக மாசடைந்து வருவதாக நீரியல் ஆய்வாளர் கூறியிருப்பதைத் தொடர்ந்து இங்குள்ள நிலத்தடி நீரின் இயல்புகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலத்தடி நீரைப்பேணும் நடவடிக்கைகள் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல்வேறு உதவும் நாடுகள் முன்வந்துள்ளன.

இவ்வாறான நிலத்தடி நீரைமாசடையாது பேணும் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இந்தக் கிணற்று நீர் பற்றிய ஆய்வுகளை யாழ். மாநகர சபை மேற்கொண்டு வருகின்றது. (33)

## வீதிச்சோதனை, மக்கள் மீதான கெடுபிடி யாழ்.குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் வீதிச்சோதனை நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் என்பனவற்றை அதிகரித்துள்ளனர்.**

குறிப்பாக பலாலிவீதி, பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறைவீதி, மானிப்பாய் வீதி, என்பனவற்றிலும், யாழ். நகர் தொடக்கம் முகமாலை வரையிலான (ஏ-9) பிரதான சாலையிலும் வீதியின் இரு மருங்குகளிலும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினரும் சந்திக்குச் சந்திகாவலரண்களை நிறுவி அவற்றில் நிலை கொண்டுள்ள இராணுவமுமே இவ்வாறு பொதுமக்கள் மீதான சோதனைக் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

வீதியால் பயணிக்கும் வாகனங்களைத் திடீரென வழிமறிந்து அவற்றைச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்துவது, பேருந்துகளில் பயணிப்போரை வீதிகளில் இறக்கி வரிசையில் விட்டுச் சோதனை, விசாரணை செய்வது ஈருருளிகளில் செல்வோர் மற்றும் பாதசாரிகளை வழிமறித்து விசாரணைகளைச் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் படையினர் அண்மைக்காலமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

## மருத்துவப்பிரிவு அலுவலகத்தில் படையினர் கொள்ளை

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாண்ம் நாவலர் வீதியில் முன்னர் இயங்கி வந்த பெண் போராளிகளின் மருத்துவப்பிரிவு அலுவலகம் கடந்த வியாழனன்று சிறிலங்காப் படையினரால் அத்துமீறி உடைக்கப்பட்டு அவ் அலுவலகத்தில் இருந்த தளபாடங்கள், உணவுப் பொருட்கள், ஈருருளிகள் போன்றவற்றை எந்தவித அனுமதியும் இன்றி கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். மற்றும் அலுவலகத்தில் இருந்த படங்கள் சிலவற்றையும் படையினர் அடித்து உடைத்திருப்பதுடன், அலுவலகத்தின் பகுதிகள் சிலவும் தோண்டப்பட்டு சோதனை நடவடிக்கை என்ற பெயரால் படையினர் வெறியாட்டமாடியிருப்பதாகவும் தெரியவருகிறது. படையினரால் மருத்துவப்பிரிவு அலுவலகம் உடைக்கப்பட்ட செயல் வன்மையான கண்டனத்திற்குரியது என்றும் பொது அமைப்புக்கள் ஒன்றியம் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. (28)

## கடற்கரை ஓரங்களில் வெளிச்சவீடு இன்மை நெருக்கடியை எதிர்நோக்கும் மீனவர்கள்

வடமராட்சிகிழக்கு கடற்கரையோரங்களில் வெளிச்ச வீடுகள் இன்மையால் அப்பகுதி மீனவர்கள் தொழில் முடித்துக்கொண்டு கரை திரும்பும் பொழுது பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தில் வெளிச்ச வீடுகள் இல்லாததினால் தாம் சென்றடைய வேண்டிய கரை எது என அறியாது வேறு இடங்களுக்குத் திசைமாறிச் சென்றடையும் நிலைமை உள்ளது.

இதனால் சிலவேளைகளில் கடற்படையினரது கடற்பாதுகாப்பு வலயத்திற்குள்கூட சென்று அகப்பட்டுக்கொள்ளும் பரிதாப நிலைமை வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக கடற்றொழிலுக்குச் சென்றுவிட்டுக் கரை திரும்பும் போது வெளிச்சவீடுகள் இன்மை காரணமாக ஏற்படும் சிக்கல்கள் குறித்து விசனம் தெரிவித்துள்ள வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தமது கடற்கரைப் பிரதேசத்தில் வெளிச்சவீடுகள் நிறுவப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## சிறிலங்காப்பொலிசாரின் துணையுடன் கசிப்பு விற்பனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து மயானத்திற்கு அருகிலுள்ள பகுதி ஒன்றில் பொலிசாரின் துணையுடன் கசிப்பு காய்ச்சப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இச்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டிய சிறிலங்காப் பொலிசார், இப்பகுதிக்குச் சென்று இலவசமாக மது அருந்திவிட்டு மயக்கத்துடன் செல்வதாகவும் இதனால் சாதாரண கூலித் தொழிலாளர்களின் குடும்பங்களே நாளாந்தம் பாதிக்கப்படுவதாகவும் இது குறித்து சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## யாழ்.இல் முதல் கட்டமாக பலாலி வீதி அகலமாக்கும் திட்டம்

யாழ்.குடாநாட்டில் உள்ள முக்கிய வீதிகள் அகலமாக்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்க்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் காரணமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இது சம்பந்தமான அறிவுறுத்தல்களையும் பொதுமக்களுக்குத் தெரிவித்தும் இருந்தார்கள்.

இதன் அடிப்படையில் முதல் கட்டமாக பலாலி வீதியில் உள்ள முதல் ஒரு கிலோ மீற்றர் தூரம் அகலமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அப்பகுதி கிராம அலுவலர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஜே 76, சிறாம்பியடி கிராம அலுவலர் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கந்தர்மடம் கிராம அலுவலர்களான ஜே.102, ஜே.103, ஜே.104, ஜே.105, கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட வீதியின் இரு மருங்கிலும் ஆகக் குறைந்தது ஐந்தடி தூரம் வேலிகள் மதில்களை அகற்ற நடவடிக்கையெடுக்கும் படி கிராம அலுவலர்கள் வேண்டப்பட்டுள்ளார்கள்.

இதற்காக உரிய காணிகளின் உரிமையாளர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி வீதிக்கு வேண்டிய காணியைப் பெறும் நடவடிக்கையை தற்போது கிராம அலுவலர்கள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளார்கள்.

ஏற்கனவே குறிப்பிட்ட வீதிகளான மானிப்பாய் வீதி, தீவகத்திற்கான வீதி, கண்டி வீதி, காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறைவீதி ஆகியன அகலமாக்குவதற்கு ஜப்பான் நாட்டின் உதவியுடன் நஷ்ட ஈடு வழங்கி காணிகளை எடுப்பதெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இது சம்பந்தமாக எந்தவொரு அறிவுறுத்தல்களையும் கிராம அலுவலர்களுக்கு தெரிவிக்காது விட்டநிலைமையில் கிராம அலுவலர்கள். மக்களுடன் கதைக்கும் போது தமது நஷ்டஈடு சம்பந்தமாக கேட்கும் போது எதுவும் கூற முடியாது திண்டாடும் நிலைமையும் காணப்படுகின்றது.(41)

## பிரசுரங்களை வெளியிடுவோரைக் காட்டுமாறு பொதுமக்களை அச்சுறுத்தும் படையினர்

யாழ். குடாநாட்டில் இராணுவத்திற்கு எதிரான பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிடுபவர்கள் யார் என்பதை இனம் காட்டுமாறு பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகின்றது.

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவம் பொதுமக்கள் மீது புரிந்துவரும் அட்டூழியங்கள், அராஜகங்கள் என்பனவற்றைக் கண்டிப்பதுடன் இவ்வாறு தமிழ்மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான இராணுவத்தின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் இராணுவம் குடாநாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தி பல்வேறுபட்ட மக்கள் அமைப்புக்களும், துண்டுப் பிரசுரங்களும், சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டு வருகின்றன..

இவ்வாறு இராணுவத்திற்கு எதிரான சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என்பனவற்றை வெளியிடுபவர்கள் யார் என்பதையும், குறிப்பிட்ட அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் யார் என்பதையும் இனம் காட்டுமாறு கோரியே இராணுவம் பொதுமக்களை மிரட்டி வருகின்றது.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது இடம்பெற்றுவரும் சுற்றிவளைப்பு, தேடுதல்கள் என்பனவற்றின் போதே இராணுவம் பொதுமக்கள் மீது இவ்வாறான மிரட்டல்களை விடுத்து வருகின்றது. (33)

## தற்காலிக கட்டடங்களில் இயங்கி வரும் உள்ளூராட்சி சபைகளுக்கு நிரந்தரக் கட்டடம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சொந்தக் கட்டடங்களின்றி தற்காலிக கட்டடங்களில் இயங்கி வருகின்ற உள்ளூராட்சி சபைகளுக்குகென நிரந்தரக் கட்டடங்களை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இருக்கின்ற 10 இற்கும், அதிகமான பிரதேச சபைகள் மற்றும் மாநகர சபைகள், சொந்தக் கட்டடம் இன்றி தற்காலிக கட்டடங்களிலேயே இயங்கி வருகின்றன.

இவ்வாறான தற்காலிக கட்டடங்களில் அதிகமானவை தனியாரது வீடுகளாகவே இருக்கின்றமையால் இவற்றில் ஒரு பிரதேசசபை அல்லது நகர சபைக் கட்டடத்திற்குரிய அடிப்படைவசதிகள், இடவசதிகள் என்பன இல்லாதுள்ளன.

இதனால் இவ்வாறான உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டமையை கவனத்தில் கொண்டே இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு புதிய கட்டடங்களை நிறுவுவதற்குப் பொருத்தமான காணித் தெரிவுகள் இடம்பெற்று வருவதாகவும், இராசையா மேலும் கூறினார். (33)

## தனியார் கட்டடங்களுக்கு கொடுப்பனவு எதுவும் வழங்காது நிலைகொண்டுள்ள படையினர்

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய காலம் முதல் சுமார் பத்து வருடங்கள் பூர்த்தி அடைந்துள்ள நிலையிலும் இராணுவம் நிலைகொண்டுள்ள வீடுகள், வர்த்தக நிலையங்கள் பல நூற்றுக்கணக்கானவற்றிற்கு எந்த வகையான கொடுப்பனவுகளும் வழங்கப்படாமல் ஆக்கிரமிப்புச் செய்த நிலைமையே காணப்படுகின்றது.

இத்தகைய நிலமையில் யாழ்.குடாநாட்டில் உள்ள கிராம அலுவலர்கள் இராணுவம் நிலைகொண்டுள்ள கட்டடங்களுக்கு வாடகை பெறுவதற்காக விண்ணப்பங்களை இராணுவ முகாம்களுக்கு அனுப்பும்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் பணிப்புரையின் பெயரில் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஸ் சார்பில் யாழ்.செயலக திட்டப் பணிப்பாளர் கே. கேதீஸ்வரன் கையொப்பம் இட்டு இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை அனைத்துப் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதில் குறிப்பிட்ட வீடுகள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களைத் தமது உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் காணியின் உறுதி புகைப்படப் பிரதி, நில அளவையாளரின் வரைபடம் குறிப்பிட்ட கட்டடத்தின் அமைவிடத்தின் வரைபடம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை உள்ளூராட்சிமன்றங்களுக்கு வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு வாடகை கோரும் விண்ணப்பதாரியின் விண்ணப்பம் ஆகியவற்றுடன் குறிப்பிட்ட இடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாமின் கட்டளை அதிகாரிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க நடவடிக்கையெடுக்கும்படி கிராம அலுவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர்கள் பணித்துள்ளார்கள்.

ஏற்கனவே கட்டடங்களின் உரிமையாளர்கள் பலதடவைகள் வாடகைப்பணத்திற்கும் மற்றும் உரிய இடங்களில் இருந்து அகலும்படியும் கோரிக்கைகள் விட்டபோதிலும் இராணுவத்தினர் எந்தவகையான நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் இத்தகைய நிலமையில் தாம் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு எந்தளவுக்கு இராணுவத்தினர் அக்கறையெடுப்பார்கள் எனவும் பொது மக்கள் வினா எழுப்புகின்றார்கள். (41)

## மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

யாழ். மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது என்று அவ் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இங்கு குறைந்த பட்சம் 15 வைத்தியர்களாவது சேவையாற்ற வேண்டிய அவசியமுள்ளது.

எனினும் இவ் வைத்தியசாலையில் தற்போது ஐந்து வைத்தியர்கள் மட்டுமே கடமையில் இருக்கின்றனர்.

இதனால் வைத்தியசாலைகளுக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான வைத்தியசேவைகளை வழங்குவதில் பல இடர்பாடுகள் இருப்பதாக மந்திகை வைத்தியசாலை நிர்வாகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# சு.க. வை சிதைவின்றிக் கைப்பற்றும் மகிந்தவின் முயற்சி வெற்றிபெற்றால்...

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண என மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஏற்பாட்டாளர்களாக நோர்வே தரப்பிற்கு இப்பொழுது அழைப்பு விடுக்கப்பட்டுவிட்டது.அது தொடர்பாக விரைவில் நோர்வே முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதல் ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய, தேசியபிக்குகள் முன்னணி வரை நோர்வேயின் சமாதான நடவடிக்கைகளை விரும்பவில்லை என்பது வெளிப்படை. ஆரம்பத்தில் சமாதான முயற்சிகளுக்கு நோர்வேயை அழைத்தது தானே என பெருமைப்பட்டுக்கொண்ட முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட நோர்வேயை பின்னர் விரும்பவில்லை.

ராஜபக்ஷவிடம் அது வலியுறுத்தியுள்ளது. மகிந்தவும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளாராம். ஆனால் அத்துடன் அது முடிந்துவிடப் போவதில்லை என்பது வெளிப்படை. எனவே இவ்விடயத்திலும் ஜே.வி.பியின் உறுதிப்பாட்டை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

அடுத்து மகிந்தவுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஜாதிகஹெல உறுமயவும் இவ் விடயத்தில் "விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை'' என்ற நிலைக்கே சென்றுள்ளது. நோர்வேயை மீண்டும் ஏற்பாட்டாளராக அழைத்தமை குறித்து ஜாதிகஹெலஉறுமயவினர் கூறுகையில்; "நோர்வே குறித்த எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை. ஆனால் மகிந்தராஜபக்ஷவின் என்று அறிந்து கொள்ள முயல்கின்றது.

இவ்வாறு அது அறிவித்ததும் சிறிலங்கா ஆட்சியாளர்களும் அதன் இனவாத ஆதரவாளர்களும் சீறிச் சினந்தனர். நோர்வே தமக்கு நிபந்தனை விதிக்கமுடியாது என்று கூக்குரலிட்டனர். ஆனால் சில நிபந்தனைகளுடன் நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபடச் சம்மதித்துள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஹொங்கொங்கில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் நோர்வே விதித்த நிபந்தனைகளை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விட்டதாக தெரிய அமைச்சரவை மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதை அது நீண்ட காலமாகவே கூறி வந்திருக்கின்றது. அதிலும் 25பேர் கொண்ட அமைச்சரவை என்பதே அதன் வரையறையாகும். 2001 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கவிழவிருந்த பொ.ஐ.மு ஆட்சியை பிடித்து வைத்திருக்க பொ.ஐ.மு வுடன் ஜே.வி.பி செய்து கொண்ட ஒப்பந்தத்தில் 25பேர் கொண்ட அமைச்சரவை என்பது அதனால் வரையறுக்கப்பட்டது. ஆனால் சந்திரிகா தன்னுடன் சேர்த்து 26 பேர் கொண்ட அமைச்சரவையை அமைத்துக் கொண்ட போது ஜே.வி.பி கடும் எதிர்ப்பைக்காட்டியது.அப்போது ஜே.வி.பி ஆட்சிக்கு வெளியிலிருந்து கொண்டு ஆதரவு கொடுத்தது.

சுக்கள் சில அமைச்சர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு ஜே.வி.பிக்கு வழங்கப்படக்கூடிய நிலையிலேயே மகிந்தவால் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ஆனால் ஜே.வி.பியின் குறி- அல்லது ஜே.வி.பி குறிவைத்துள்ள பாதுகாப்பு அமைச்சு அதற்கு வழங்கப்படாமையால் அது அமைச்சரவையில் இணையாமைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆட்சிக் காலம் இன்னும் ஆறுவருடங்கள் இருக்கின்றன. அதனை ஜே.வி.பி ஒன்றும் செய்து விடமுடியாது. ஆனால் மகிந்த பாராளுமன்றத்தைக் கலைத்து ஜே.வி.பி. யுடன் கூட்டுச் சேராது பொதுத் தேர்தலை நடத்தினால் இப்பொழுதுள்ள 39 ஆசனங்களைப் பெறுவது ஜே.வி.பிக்கு சுலபமாக இராது.

எனவே இப்பொழுது மகிந்தவுடன் முரண்பட்டுக்கொள்ள ஜே.வி.பிக்கு விருப்பமில்லை. அதே வேளை தமது அழுத்தத்தைப் பிரயோகிக்காதும் இருக்க முடியாத நிலையிலேயே இவ்வாறான விமர்சனங்களை ஜே.வி.பி முன் வைக்கின்றது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளில் முன்னிலை வகித்து வந்த எரிக்சொல்ஹெய்மை இம் முயற்சியிலிருந்து விலக்கிவைக்க வேண்டும் என வலியுறுத்தி அவரைப் பின்னிலைக்குத் தள்ளியவர் சந்திரிகாவே. அவரின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் எரிக்சொல்கெய்முடன் எந்நேரமும் முறுகல் போக்கையே கொண்டிருந்தார்.

இந்நிலையில் மகிந்தராஜபக்ஷவினால் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள மங்களசமரவீர முன்னர் நோர்வே மக்களையே இழிவுபடுத்தும் வகையில் பேசிவந்தார். ஆனால் இப்பொழுது நோர்வேயின் காலடியில் சென்றுவிழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலை குறித்தும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பு குழுத்தலைமைத்துவநிலை குறித்தும் மகிந்தவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு மேடை



பெரிய அமைச்சரவை பதவியேற்பு

களில் முழங்கித்திரிந்த ஜே.வி.பி, இப்பொழுது ஏற்பாட்டாளர் நிலையை வே... வழியின்றி ஒப்புக் கொ...டுள்ளது.

உண்மையில் சமாதான முயற்சிகளை ஆரம்பமுதலே எதிர்த்து வந்த ஜேவிபி முன்னர் ஆட்சியில் பங்குவகித்த போதும் ...ர்வேயை ஓரங்கட்டிவிட முடியவில்லை. இப்பொழுது அதியுயர் அதிகாரம்படைத்தவரை ஆட்டிப் படைக்கும் சக்தி தம்மிடம் உள்ள போதும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இப்பொழுது கண்காணிப்புக் குழுத்தலைமை நோர்வேயிடம் இருக்கக் கூடாது என மகிந்த

இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பவில்லை; எமக்கும் மகிந்தவிற்கும் இடையிலான ஒப்பந்தத்தில் நோர்வே குறித்த விவகாரம் இடம்பெறவில்லை'' எனக் கூறியிருக்கிறது.

ஆனால் உண்மையில் நோர்வேயை வெள்ளைப் புலிகள் என்றே இப்பொழுதும் ஜாதிக ஹெலஉறுமய வர்ணித்து வருகின்றது. எனவே நோர்வேயின் ஏற்பாட்டாளர் நிலையை சிறிதும் விரும்பாத ஒன்றாகவே அதுவும் இருக்கின்றது.

அதேவேளை சமாதான முயற்சிகளில் இருந்து நோர்வேயை அகற்றவேண்டும் என்று நேரடியாகவே நிபந்தனை வைத்து ஒப்பந்தம் செய்து கொண்டு மகிந்தவை ஆதரித்தது தேசியபிக்குகள் முன்னணி . அதன் சத்தத்தை இப்பொழுது காணவில்லை.

எவ்வாறாயினும் இப்பொழுது விரும்பத்தகாத ஏற்பாட்டாளர்களின்

ஏற்பாட்டில் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கப்போவதாக மகிந்த கூறுகிறார். அதன் ஆரம்பமாக ரணிலை சந்தித்தும் இருக்கின்றார்.

இந் நிலையில் சிறிலங்காவில் அதிகாரத்திலிருக்கும் தரப்பிற்கு தாம் விரும்பத்தகாதவர்களாயிருப்பது நோர்வேக்கு தெரியாததொன்றல்ல. எனவே சமாதான முயற்சிகளில் மீண்டும் ஈடுபட முன், சிறிலங்கா அரசாங்கத்துக்கு சில நிபந்தனைகளை விதிக்க நோர்வே விரும்புகின்றது. அதாவது சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதனால் பயனுண்டா? தமது நாட்டின் கௌரவத்திற்குப் பாதிப்பு ஏற்படுமா?

வருகிறது.

இது மகிந்தராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் மக்கள் மத்தியில் கூறிய வீரவசனங்களுக்கு என்ன கதி ஏற்படப்போகின்றது? என்பதற்கு ஒரு உதாரணம் மட்டுமே.

இனப்பிரச்சினை விடயத்தில் நிலைமை இவ்வாறாயின் ஏனைய வாக்குறுதிகளும் என்ன நிலைக்குச் செல்லப் போகின்றன என்பதற்கும் உதாரணங்கள் தற்பொழுதே உருவாகத் தொடங்கியுள்ளன.

மகிந்தகுழுவினர் முன்னவைத்த வாக்குறுதிகளில் விவசாயிகளுக்கு 350 ரூபா விலையில் உரம் என்பது உடனடியாகவே செயற்பாட்டுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிலும் ஒரு பகுதி விவசாயிகளுக்கே இப்பொழுது 350ரூபா விலையில் உரம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உரம் கிடைக்கும் என்பதனை வெளிப்படுத்தும் வகையில் பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

அடுத்த முக்கியமான விடயம் தொழில் வாய்ப்பு. மகிந்தராஜபக்ஷவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஏலம் கூறுவது போல தொழில் வாய்ப்பின் தொகையை விரும்பியவாறு ஏற்றிச் சென்றனர். இப்பொழுது மாட்டிக் கொண்டவர் மகிந்த ராஜபக்ஷ. ஆனால் அதற்கும் அவர் ஒருவழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். அதாவது விரைவில் சுயதொழில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலான திட்டங்களை அறிவிக்கப்போவதாக அரசாங்கம் கூறுகிறது.

ஆனால் இலங்கை மக்களைப் பொறுத்த வரை அரசாங்க வேலை வாய்ப்பையே அவர்கள் தொழில் எனக் கருதுவதும் ஏனையவற்றை அவ்வாறு கருதுவதில்லை என்பதும் வெளிப்படை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க மகிந்தவை சனாதிபதியாக்கிய பெருமையுடன் இருக்கும் ஜே.வி.பி தான் ஆட்சிக்கு வெளியில் நின்று கொண்டு என்ன செய்ய போகின்றது? என்பதனை வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளது.

அதாவது சிறிலங்காவின்



ஐ.தே.க.வுடன் மகிந்த சந்திப்பு

ஆனால் 2004 ஏப்ரலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி பீடம் ஏறியபோது அது ஆட்சியில் இணைந்து கொண்ட போது அமைச்சரவை 25இலும் பெரிதாக இருந்த போதும் அது அலட்டிக்கொள்ளவில்லை.

இப்பொழுது அது ஆட்சிக்கு வெளியில், ஆனால் ஆதரவாக இருக்கின்றது. இப்பொழுது 89 பேர் கொண்ட பெரிய அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளதாக மீண்டும் குற்றம் சுமத்தத் தொடங்கியுள்ளது. இது வெறுமனே குற்றச்சாட்டுப் போலத் தெரியவில்லை

அமைச்சரவையில் இவ்வளவு பெரிய தொகையில் உறுப்பினர்கள் இருப்பது என்பது சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ள முரண்பாட்டை வெகு துல்லியமாக வெளிப்படுத்துகிறது.

மகிந்த ஆதரவு, சந்திரிகா ஆதரவு பா.உ கள் அனைவரையும் திருப்திப்படுத்தி பாராளுமன்றத்திலும் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள மகிந்த எடுத்த நடவடிக்கையே இது.

ஆனால் அது மாத்திரம் பாராளுமன்ற அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள மகிந்தவுக்கு போதுமானதல்ல, ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய என்பனவற்றின் ஆதரவும் அவருக்கு தேவை. இப்பொழுது ஜே.வி.பி யும், ஜாதிக ஹெல உறுமயவும் ஆட்சியில் இணைந்து கொண்டால் அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மகிந்த தயாராகவேயுள்ளார்

இந்நிலையில் ஜே.வி.பிக்கு என மகிந்தவால் ஒதுக்கப்பட்ட அமைச்

ஆனால் மகிந்தவுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் களையெடுப்புச் செய்து கட்சியை தனது முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவேண்டிய தேவையுள்ளது. அவ்வேளையில் பண்டார நாயக்க குடும்பத்துடன் ஏற்படக்கூடிய மோதலின் போது துணைக்குச் சென்று தான் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளலாம் என ஜே.வி.பி எண்ணுகிறது.

ஆனால் மகிந்தவோ அமைச்சுப்பதவிகள் சலுகைகளை சு.க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கி கட்சியைச் சிதைவின்றிக் கைப்பற்றவே விரும்புகிறார். அதற்காகவே அவருக்காக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடாத தமது கட்சி பா.உ. களுக்குக் கூட அமைச்சுப் பதவி களை வழங்கியிருக்கிறார்.

அவ்வாறு சிதைவின்றி கட்சியை அவரால் கைப்பற்ற முடியுமானால் இலவுகாத்த கிளியின் நிலை ஜே.வி.பிக்கு ஏற்படலாம்.

வேலவன்

விரைவில் பொதுத்தேர்தல் நடைபெற்று ஜே.வி.பி யின் பலத்தைக் குறைத்துவிட மகிந்தராஜ பக்ஷ முயல்வார் எனை எதிர்பாக்கலாம்.

அவ்வாறு நடந்தால் மகிந்தவைவிட்டு வெளியேறுவதற்கான காரணங்கள் சிலவற்றைக் கூறவே ஜே.வி.பி தற்போது சில குற்றச்சாட்டுக்களை / நிபந்தனைகளை முன்வைக்கத் தொடங்கியிருக்கிறது.

# கிளி. மாவட்டத்தில் சிறந்தவிவசாயிகளாக கௌரவிக்கப்பட்டோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களமும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து சிறந்த விவசாயிகளாக தெரிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் கௌரவிக்கப்பெற்ற விவசாயிகளின் பெயர்கள் பின்வருமாறு,

ந.சத்தியசீலன் ஊரியான், சி.ஜெகநாதன் ஊரியான், கி.தெய்வேந்திரம் ஊரியான், வே.செல்வவிநாயகமூர்த்தி 48 இராமநாதபுரம்,ச.பாஸ்கரன் 887 ஆறுமுகம்வீதி வட்டக்கச்சி, ச.சிவபாலச்சந்திரன் 738 சிவிக்சென்றர் வட்டக்கச்சி, நீநிவாகினி கட்டைக்காடு பெரியகுளம், கோ.யசோ கல்மடுநகர், க.மகேந்திரராசா ஜெயப்பிரகாஸ் கல்மடுநகர், நாகரத்தினம் குணசேகரம் மறவகுறிச்சி பூநகரி, பத்மநாதன் மகேந்திரராசா செட்டியகுறிச்சி பூநகரி, தனபாலசிங்கம் வதனா சாமிப்புலம் பூநகரி, பொன்னையா கைலாயபிள்ளை சங்கத்தார் வயல் பளை,செல்லையாதங்கவேல் சங்கத்தார்வயல் பளை, குழந்தையர் ஐயாத்துரை மாசார்பளை,

மகேந்திரன் கமலவேணி, இராமநாதன் கமம் சோலைநகர் புதுமுறிப்பு, திருநாவுக்கரசு தயானந்தன் 108 சிவநகர் உருத்திரபுரம், தம்பையா கணேசமூர்த்தி சிவன்சோலை சிவநகர் உருத்திரபுரம், கனகரட்ணம் யோகேந்திரம் 01 சோலை பல்லவராயன்கட்டு, பொன்னம்பலம் நடேசபிள்ளை இல.49 சோலை பல்லவராயன்கட்டு, அப்பையா நல்லையா சோலை பல்லவராயன்கட்டு, குமாரசாமி திருநாவுக்கரசு வேரவில் முழங்காவில், இம்மானுவல் பத்மதேனன் 285 குமுழமுனை முழங்காவில், சிதம்பரி இராசலிங்கம் வேரவில் முழங்காவில், கனகசபை வைத்திலிங்கம் நேரடம்பன் பூநகரி, கதிரவேலு சத்தியசொரூபன் நல்லூர் பூநகரி, நடேசு நாகேஸ்வரன் தெனிவரை பூநகரி, சண்முகவேல், நடேசானந்தம் இல.12 கனகாம்பிகைக்குளம் கிளிநகர், தம்பையா கணேசமூர்த்தி இல.50 சிவநகர் உருத்திரபுரம், கனகரத்தினம் ஜெயக்குமார் அம்பாள்குளம் கிளிநொச்சி,

நாகலிங்கம் சிவராசா 5ஆம் வாய்க்கால் பரந்தன், சின்னத்தம்பி இராசநாயகம் டி-3 றொட்டிக்கோ வீதி பரந்தன், கா.வன்னியசிங்கம் 593, 6ஆம் யூனிற் இராமநாதபுரம், பொன்னுத்துரை செல்வராசா கோரக்கன்கட்டு ஊரியான், மருதப்பு சிவகுமார் 94 வன்னேரிக்குளம், வெள்ளைச்சாமி அன்னக்கொடி 171 ஜெயபுரம் பல்லவராயன்கட்டு, வல்லிபுரம் கணேசலிங்கம் சிவன்வீதி உருத்திரபுரம், குமாரசாமி நீலைனை தருமபுரம் கிழக்கு, முருகேசு வேலாயுதப்பிள்ளை பேராலை பளை, கதிரவேலு சிறிபாலன் செட்டியாகுறிச்சி பூநகரி, முருகேசு சிறியோகநாதன் 51 கண்டாவளை, காசித்தம்பி இராசேந்திரம் 261 கரியாலைநாகபடுவான், பொன்னையா கையிலாயப்பிள்ளை சங்கத்தார் வயல் இயக்கச்சி, துரைசாமி சண்முகலிங்கம் செல்விபுரம் பூநகரி, நாகநாதர் திலகராசா 364 விவேகானந்தநகர் கிளிநொச்சி, சின்னத்தம்பி கனகரட்ணம் சங்கத்தார்வயல் இயக்கச்சி, சின்னத்தம்பி ஐயாத்துரை 56/2 திருவையாறு, கந்தையா சந்திரசேகரம் ஆலங்கேணி பூநகரி, லூக்காஸ் வஸ்தியாம்பிள்ளை கல்மடுநகர், அந்தோனிப்பிள்ளை அமிர்தராசா 351 ஈச்சங்குளம் அக்கராயன், அம்பலம் முருகேசு 42 சக்திபுரம் உருத்திரபுரம்வடக்கு, வேலுப்பிள்ளைசிறினிவாசகம்113/2 திருவையாறு, செல்லத்துரை கிறிஸ்ணானந்தன் தம்பிராய் பூநகரி, ஆறுமுகம் விஸ்வநாதன் பிரமந்தனாறு, வேலுப்பிள்ளை பிரபாகரன் 31 ஆம் கட்டை முழங்காவில், மூத்தம்பி நவரட்ணம் 09 முழங்காவில், சின்னத்துரை நாகராசா சிவபாலன்வீதி முழங்காவில்,கணபதி ஆதிமூலம் விவேகானந்தநகர் கிளிநொச்சி, பத்மநாதன் அமிர்தவல்லி 176/3 திருவையாறு, பொன்னையா யோகராசா 600 இராமநாதபுரம், சிவகுருஅம்பிகைபாலன், தர்மக்கேணி பளை, துரைச்சாமி பெருமாள் தர்மபுரம்கிழக்கு, செல்லையா கணபதி 117 யூனியன்குளம் கோணாவில், பழனியாண்டி இராசேந்திரம், பல்லவராயன்கட்டு சுண்ணாவில், இ.சதானந்தலட்சுமி சிவன் வீதி உருத்திரபுரம்,

ஆறுமுகம் கறுப்பையா கிருஸ்ணபுரம் கிளிநொச்சி, சு.மோகனதாஸ் 63/2 திருவையாறு, செல்வரத்தினம் செல்வராசா 102/2 திருவையாறு, தா.குகஞானபண்டிதர் 25 சாரதாஅம்மன் கோவிலடி மாயவனூர், செல்லத்துரை நவரட்ணம் தர்மக்கேணி பளை, சுப்பிரமணியம் சிவராசா நெடுக்குளம் பூநகரி, அந்தோணி பேரின்பநாயகம் கோரக்கன்கட்டு, வீரகத்தி விக்கினேஸ்வரராசா புன்னைநீராவி, கணபதிப்பிள்ளை சபாலிங்கம், பிரமந்தனாறு, கந்தையா தனபாலசிங்கம் 55 கண்ணகைபுரம், இரத்தினம் இராஜேஸ்வரன் குருபரன் வீதி முழங்காவில், கந்தன் மார்கண்டு சிவன்வீதி உருத்திரபுரம், ஐ.வீரையா டீ-5 பரந்தன், வட்டன் சின்னத்தம்பி 79 கனகாம்பிகைக்குளம் அரியபுத்திரன் கிருஸ்ணசீலன் புதுக்காடு இராமநாதபுரம், அருணாசலம் வில்வரத்தினம் சின்னப்பல்வராயன்கட்டு பூநகரி, இராசதுரை சாந்தன் கோபால் முரசுமோட்டை, பிலிப்பு இமானுவேல் புன்னைநீராவி, நாகநாதி கணபதிப்பிள்ளை 33 கண்ணகைபுரம், பேரம்பலம் கமலநாதன் சிவன்வீதி உருத்திரபுரம், தங்கரத்தினம் விஸ்யகுமார் 109 ஸ்கந்தபுரம், இராஜகேபால் கோமகுமாரி இம்மாஸ்நகர் 8ஆம் கட்டை அக்கராயன், முத்தையா செட்டியார் கணபதி அப்பாள்குளம்கிளிநொச்சி, சி.நடராசா விவேகானந்தநகர் கிளிநொச்சி, கனகசபை சிவபாதம் 144/3 திருவையாறு, பொன்னுத்துரை புவனராஜ் 465 6 ஆம்யூனிற் இராமநாதபுரம், நாகமுத்து சபாரத்தினம் இத்தாவில் பளை, விஸ்வலிங்கம் இரத்தினசிங்கம் உயரிப்பிட்டி பூநகரி, பரமு கந்தசாமி சிவன்வீதி உருத்திரபுரம், செல்லையா செல்வரட்ணம் கண்டாவளை, (சோ)

# முதலாளித்துவ குணாம்சத்தின் சிந்தனையுடன் மகிந்த செயற்பட ஆரம்பித்துள்ளார்

## –புதிய இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது வரவு-செலவுத் திட்டமும் சிந்தனையும் முதலாளித்துவ குணாம்சத்தின் சிந்தனையே என்று புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண சாடியுள்ளார்.

மகிந்தவின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏழைகளுக்கு வழங்கப்போவதாகக் கூறி வந்த எதுவும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறவில்லை. யாவும் மறக்கப்பட்ட நிலையே தென்படுகிறது.

மக்களுக்காக என பிரசாரங்கள் செய்யப்பட்டாலும் வரவு-செலவுத் திட்டத்தின் பின்புலத்தில் உலகமய சுரண்டலாளர்கள் தெளிவாகத் தெரிகின்றனர். தனது உரையில் உட்கட்டுமான பணியினை தேசிய மட்டத்திலும் கிராமிய மட்டத்திலும் நவீனப்படுத்தி உற்பத்தி வேகத்தை அதிகரிப்பதுடன் சிறிலங்காவுக்கும் வெளிநாட்டிற்கும் ஏற்ற வகையில் வேலை வாய்ப்பிற்கான திறமையை வளர்க்கப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

மேலும் தனியார்துறை, மக்கள் துறை அரசசார்பற்றதுறை என்பவற்றின் ஊடாக இந்தப் பொருளாதார இலக்கை அடையப்போவதாகவும் கூறியிருக்கிறார்.

மகிந்தவின் பொருளாதார ஆலோசகர் அஜித் கப்ரலிடம் அதற்கான பணத்தை அரசாங்கம் எங்கே இருந்து பெறப்போகிறது என கேட்கப்பட்ட போது எம்மால் நடைமுறைப் படுத்தப்படஇருக்கும் இந்தப் பாரிய அபிவிருத்தித் திட்டத் தின் மூலம் அந்த இலக்கை அடை வோம், எனக் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், நாங்கள் 12 பொருளாதார வலயங்களை உருவாக்க உள்ளோம். 300 புதிய கைத்தொழில் சாலைகளை அமைக்க உள்ளோம். மின் உற்பத்தி நிலையங்கள், பாரிய பாதைகள், புதிய விமான நிலையம் என்பவற்றின் மூலம் மிகப்பெரியதொரு பொருளாதார இலக்கை அடைய இருக்கிறோம். இந்த நாட்டில் வரலாற்றில் இப்படியான பாரிய அபிவிருத்தித் திட்டம் முன்வைக்கப்படவில்லை எனக் கூறியிருக்கிறார்.

இப்படியான பெரிய எதிர்பார்ப்புகள் பேச்சுக்கள் என்பன ஜே.ஆர். ஜெயவர்த்தன பதவிக்கு வந்த போதும் கூறப்பட்டது.

அதாவது துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம், சுதந்திர வர்த்தக வலயம் என்பவற்றின் ஊடாக 10 சதவீத பொருளாதார வளர்ச்சிகிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.தற்போதுபெருமளவு பண முதலைகள் 1970 பிற்பகுதியில் நடந்ததைப்போல் மிக எதிர்பார்ப்புடன் உட்கட்டமைப்புக்காக அதிக மூல தனங்களை எதிர்பார்த்துக் காத்து கிடக்கின்றனர்.

அலோய் ஜெயவர்தனா என்பவர் உட்கட்டுமான பணிகள் மின்சாரம், தண்ணீர், நெடுஞ்சாலைகள் என்பவற்றிற்கே முன்னுரிமை வழங்கப் படும் எனக்கூறியுள்ளார்.

உண்மையில் பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்பது போல ஏழைகள் பற்றி அதிகம் கதைப்பது ஆனால் ஒன்றுமே செய்யாது வருவது முதலாளித்துவத்தின் குணாம்சமாகும். இதுவே மகிந்த சிந்தனையும் ஆகும்.

# மக்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாண பொதுமக்கள் விசேட இணைப்புப் பிரிவு

## –சனாதிபதி மகிந்த கூறுகிறார்

(கொழும்பு)

பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதற்காக பொதுமக்கள் விசேட இணைப்புப் பிரிவை ஏற்படுத்த சிறிலங்காப் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் அனைத்து இணைப்புச் செயலாளர்களின் பங்களிப்புடன் அலரி மாளிகைக்கு அருகிலிருக்கும் கட்டடத்தில் இந்த இணைப்புப் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்தப்பிரிவினூடாக ஒவ்வொரு புதன்கிழமையிலும் பிரச்சினைக்கான தீர்வு காணல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பிரிவின் முதலாவது நிகழ்ச்சி கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வில் பொதுமக்களின் பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப் பட்டதாக கூறப்படுகிறது.

# காட்டுயானைகளை விரட்ட விசேட செயற்திட்டம்

(கொழும்பு)

அனுராதபுரம் கல்கிரியாகம பிரதேசத்தில் புகுந்துள்ள காட்டு யானைகளை விரட்ட விசேட செயற்திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனைக்கருத்தில் கொண்டு காடுகளில் இருந்து வெளியே வரும் யானைகளை மீண்டும்காட்டுக்குள் துரத்துவதற்கு 20 பேர் கொண்ட குழுவினர் கடந்த புதன்கிழமை கல்கிரியாகமவில் தமது பணிகளை ஆரம்பித்தனர்.

காட்டு யானைகள் இந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் புகுந்து அட்டகாசம் புரிவதால் தமது பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கல்கிரியாகம பகுதியில் யானை தாக்கியதில் இரண்டு பேர்சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (32)

# புலிகளின் பெயரில் வழிப்பறியில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவச் சிப்பாய் கைது

## – பிள்ளையாரடியில் சம்பவம்

விடுதலைப்புலிகள் உறுப்பினரைப் போல செயற்பட்டு வாகனங்களை நிறுத்தி பணக் கொள்ளையில் ஈடுபட்ட சிங்கள இளைஞரை வெலிக்கந்தை சிறிலங்கா பொலிசார் கடந்த புதன் கிழமை கைது செய்துள்ளனர். மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வாகனங்கள் சிலவற்றை நிறுத்தி தமிழ் மொழியில் உரையாடி துப்பாக்கியைக் காண்பித்து வாகனங்களில் பயணித் தவர்களை பயமுறுத்தி இந்த சந்தேக நபர் கொள்ளையில் ஈடுபட்டு வந்துள்ளார்.இப்பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை சுற்றுக்காவல் சென்ற பொலிசார் இந்த சம்பவம் குறித்து கேள்விப்பட்டு வெலிக்கந்தை பிள்ளையாரடி பிரதேசத்தில் சந்தேக நபரை துப்பாக்கியுடன் கைது செய்தனர்.இவரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளில் இவர் மன்னம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

# தேசவிரோதக்குழு உறுப்பினர் குடாப்பொக்கணையில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு- பொலனறுவை மாவட்ட எல்லைப் பிரதேசமான குடாப் பொக்கணையில் கடந்த வியாழக்கிழமை இரவு கருணா குழு உறுப்பினர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் ஹரன் என்றும் அவர் வீட்டிலிருந்தபோது இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்றும் அந்தப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக வெலிக்கந்தை சிறிலங்காப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சந்திரிகாவுக்காக விமானம் தாமதம்; விசாரணை மேற்கொள்ளப் பணிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முன்னாள் சனாதிபதி சந்திரிகாவுக்காக சிறிலங்கா ஏர்லைன்ஸ் விமானம் ஒரு மணிநேரம் தாமதமாகப் புறப்பட்டது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

யுஎல்.316 விமானம் கொழும்பு விமான நிலையத்திலிருந்து திங்கள் பிற்பகல் 12.40 மணிக்கு சிங்கப்பூர் செல்ல தயாராக இருந்தது.ஆனால் விமானநிலைய நிர்வாகத்தை தொடர்பு கொண்ட சந்திரிகா தான் வரவுள்ளதால் விமானத்தை தாமதமாக இயக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

குறித்தநேரத்தில் விமானம் புறப்படாததால் விமானப் பயணிகள் ஆத்திரமடைந்து கேள்வி எழுப்பிய போதும் விமான நிலைய நிர்வாகம் பதிலளிக்காமல் அமைதி காத்தது. இதனால் விமானத்துக்குள் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இந்த நிலையில் பிற்பகல் 1.40 மணிக்கு விமான நிலையத்துக்கு சந்திரிகா வந்து சேர்ந்தார். இதன் பின்னர் விமானம் புறப்பட்டுச் சென்றது. சந்திரிகாவுக்காக விமானம் ஒரு மணிநேரம் தாமதமாகப் புறப்பட்டது தொடர்பில் விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் - II (நிகொட் - II)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆஅவ" கடன் இல. 2168 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல் - 03

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம் - II (NECORD-II) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD), கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/NECORD-II/AG/02 | ஓமந்தை கமநல கேந்திர நிலையம், உரக்களஞ்சியம், உழவு இயந்திர தரிப்பிட நிர்மாணம் | M6 | 78,000.00 |
| 02 | VA/NECORD-II/ED/11 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/நீலியாமோட்டை சரஸ்வதி வித்தியாலயம். | M7 | 30,000.00 |
| 03 | VA/NECORD-II/ED/12 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/அருவித்தோட்டம் சிவாநந்தா வித்தியாலயம். | M7 | 30,000.00 |
| 04 | VA/NECORD-II/ED/13 | 110'x25' இரண்டு மாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/பெரியதம்பனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. | M6 | 75,000.00 |
| 05 | VA/NECORD-II/ED/14 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/கங்கன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. | M7 | 30,000.00 |
| 06 | VA/NECORD-II/ED/15 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/நொச்சிக்குளம் இல.01 கனிஷ்ட பாடசாலை. | M7 | 32,000.00 |
| 07 | VA/NECORD-II/ED/16 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/மாணிக்கர் இலுப்பைக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. | M7 | 29,000.00 |
| 08 | VA/NECORD-II/ED/17 | 110'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம். | | 28,000.00 |
| 09 | VA/NECORD-II/ED/18 | 80'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணம் வ/அலைகல்லுபோட்டகுளம் வீரமாமுனிவர் வித்தியாலயம். | | [illegible] |
| 10 | VA/NECORD-II/ED/19 | 40x20' விஞ்ஞான கூட நிர்மாணம் வ/சின்னப்பூவரசங்குளம் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம் | M8 | 18,000.00 |
| 11 | VA/NECORD-II/ED/20 | 40'x20' விஞ்ஞான கூட நிர்மாணம் வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் | M8 | 18,000.00 |
| 12 | VA/NECORD-II/ED/21 | 80'x25' வகுப்பறைக் கட்டட நிர்மாணமும், சுற்றுவேலி அமைத்தலும் வ/தாலிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை. | M8 | 24,000.00 |
| 13 | VA/NECORD-II/RD/01 | புதூர் - பாலமோட்டை வீதி (5.40 கி.மீ) செப்பனிடல் (DBST) | M5 | 226,000.00 |
| 14 | VA/NECORD-II/RD/02 | பிரமணாரங்குளம் - பரப்புக்கடந்தான் வீதி (6.60 – 9.60 கி.மீ) செப்பனிடல் (DBST) | M5 | 212,000.00 |
| 15 | VA/NECORD-II/ID/03 | வவுனியா மாவட்ட செயலகத்தில் மாநாட்டு மண்டபம் நிர்மாணித்தல். | M5 | 147,000.00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலையிடல் ஏற்றுக்கொள்ளப்படும்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்டாட்" உடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது (9ஆம் பக்கம் பார்க்க)

## Request for Quotations

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following items:

| Lot/Item | Unit | Vavuniya | Mannar | Kilinochchi | Mullaitivu | Jaffna | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 1.Steel (TOR) | Kg. | 32,000 | 34,000 | 7,200 | 7,200 | - | 80,400 |
| 2.Ridge Tiles | Nos. | 10,000 | 8,000 | 2,500 | 2,500 | 3,500 | 26,500 |
| 3.Metal (1.5 inches) | Cube | 420 | 150 | 210 | 210 | 270 | 1,260 |
| 4.Metal (0.75 inches) | Cube | 30 | 40 | 25 | 25 | 50 | 170 |

The RFQ documents could be collected from the following locations **from December 20, 2005 onwards** and prospective bidders are required to present a request letter on the firm's business letterhead:

UNDP Office, 121, Temple Road, Jaffna
UNDP Office, 127/18 A, Esplanade Road, Moor Street, Mannar
UNDP Office, 19, Temple Road, Kurumankadu, Vavuniya
UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, Kilinochchi

**Completed documents will be accepted at any of the above locations until 3 p.m. on January 2, 2006.**

Documents can also be obtained and submitted to the Field Operations Manager, UNDP, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka.

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons. The minimum bid should be for one item per district.

(சி-13565)

## Request for Quotations

United Nations Development Programme, Sri Lanka invites Request for Quotations (RFQ) for the following civil works projects in **Mannar, Jaffna, Ampara and Batticaloa**. The documents can be collected from the locations given against each action:

| | | |
|---|---|---|
| Lot 1 | Construction of District Agricultural Training Centre in Mannar | 258 Pullimunai Road, Uppukulam, **Mannar** |
| Lot 2 | Reconstruction of Access Road to Koddaikadu in Chankanai, Jaffna | UNDP Office, 121A Temple Road, **Jaffna** |
| Lot 3 | Reconstruction of Anaivuluthan Punithanagar Access Road, Jaffna | UNDP Office, 121A Temple Road, **Jaffna** |
| Lot 4 | Construction of a Health Centre in Arumugathan Kulam, Mullaitivu | UNDP Office, 7, Kumaraswamy Road, Ganeshapuram, **Kilinochchi** |
| Lot 5 | Construction of Drainage at Alayadivembu DS division | UNDP Office, 63, Jayawardenapura, **Ampara.** |
| Lot 6 | Construction of Drainage at Maruthamunai, Kalmunai Muslim DS Division | UNDP Office, 63, Jayawardenapura, **Ampara** |
| Lot 7 | Construction of Poultry-Growing Building and a Seed Production Unit at Eastern University of Sri Lanka | UNDP Office, 30, Charles Velupillai Road, **Batticaloa** |

Documents to be presented for obtaining RFQ documents:

- request letter for document on the Company's business letterhead
- ICTAD registration book (contractors are requested to be of minimum M7 level of ICTAD)

Completed documents will be accepted at the same locations from where the documents are distributed until 5 p.m. on January 2, 2006. Documents can also be obtained from the UNDP Programme Office, Operations Manager, 202-204 Bauddhaloka Mawatha, Colombo 7, Sri Lanka or via email at procurement.tp.lk@undp.org

No telephone inquiries will be solicited and UNDP reserves the right to cancel all or one of the above actions and/or reject any quotations, without assigning any reasons.

(சி-13564)

வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "இக்டாட" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை மாவட்ட பிரதிக் கருத்திட்டப்பணிப்பாளர் அலுவலகம், **NECORD,** வவுனியாவில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 024-2222589, பக்ஸ்: 024-2222589, ஈமெயில்: **necordva@sltnet.lk**.

6. கேள்வி ஆவணங்களை டிசம்பர் 27, 2005 இல் இலிருந்து ஜனவரி 10, 2006 வரை முற்பகல 9.30இல் இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலக்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா ஆயிரம் **(1,000/=)** ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8ல் குறிப்பிட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், மாவட்ட கேள்விச்சபை, **NECORD,** மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியா என்ற விலாசமிடப்பட்டு, ஜனவரி 18, 2006 பிற்பகல் 3.00 இற்கு முன்பதாக கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்விதாரர்கள், அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

9. முன்கூட்டிய கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று, மேற்படி அலுவலகத்தில் 02.01.2006 ஆந் திகதி அன்று முற்பகல் 10.30 இற்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக மாட்டார்.

**சி.சண்முகம்,**
**தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,**
**வவுனியா மாவட்டம்.**

(சி-13603)

# யு.நி. அமுலாக்கம்...

அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து செயற்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் எழுப்ப வேண்டும். இதற்கான சூழல் உருவாகவேண்டும். இதற்கான முழு ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவோம். இந்த முயற்சிகளை எமது மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள். அனைவரும் ஒன்றுபட்டு தமிழ் மக்களின் பிரச்சினையில் செயற்பட வேண்டும் எனத் தலைவர் எதிர்பார்ப்புடன் இருந்தார். அந்த வகையில் இன்றைய சந்திப்பு மிக ஆக்கபூர்வமாக இருந்தது. வெளிப்படையாகவும், மனம் திறந்தும் பேசியிருந்தோம். இது எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான விளைவைத் தரும் என்று நாம் நம்புகின்றோம்.

□ முஸ்லிம் கட்சிகளை இதற்குள் உள்ளடக்குவீர்களா?

ஒன்றிணைந்து ஓர் இலட்சியத்தின் கீழ் செயற்படுவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். நாம் எப்போதும் இதற்கு எதிரானவர்கள் அல்ல. தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பாக ஒன்றிணைந்து செயற்பட எவர் முன்வருகிறார்களோ அவர்களை எல்லாம் நாம் வரவேற்போம்.

□ தேசியத்தலைவர் அவர்களை ஹக்கீம் சந்திக்கப் போவதாகக் கூறியிருக்கிறார்?

பத்திரிகை அறிக்கைகள் மாத்திரம் சந்திப்புக்களையும், நல்லுறவையும் ஏற்படுத்தாது. அதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதுவே ஆக்கபூர்வமாக அமையும்.

□ இலங்கை அரசாங்கம் விடுத்திருக்கும் சமாதான கோரிக்கை சம்பந்தமாக விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு என்ன? பேச்சுக்கள் ஆசிய நாடுகளில் நடைபெறவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே அங்கும் நடைபெற்றிருக்கிறது. இந்த நிலையில் உங்களின் நிலைப்பாடு எப்படி இருக்கிறது?

தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. நாங்கள் எமது தலைலைப்பீடத்தின் நிலைப்பாடு பற்றி ஏற்கனவே நோர்வேத் தரப்போடு பேசியிருந்தோம்.

அன்றைய தினமே எமது விருப்பத்தையும் தெரிவித்திருந்தோம்.

அன்றைய தினமே எமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தோம்.

நாங்கள் பேச்சுக்களுக்கு ஒருபோதும் தடையாக இருக்கப்போவதில்லை. அனைத்திற்கும் அடிப்படையாக இருக்கின்ற யுத்த நிறுத்த உடன்பாடு சீர்குலைந்து போகின்ற ஆபத்தான கட்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதனைச் சீர்செய்ய வேண்டும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை அமுலாக்குவது பற்றி நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம். இந்தப் பேச்சுக்கள் ஐரோப்பிய நாடு ஒன்றில் நடைபெறவேண்டும். நோர்வே அனுசரணையாளராக இருப்பதால் அங்கே முதல் கட்டப் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற எமது விருப்பத்தைத் தெரிவிக்கின்றோம். இந்த நிலைப்பாட்டில் எமக்கு எந்த மாற்றமும் இல்லை. இலங்கை அரசாங்கம் ஆசிய நாடு ஒன்றில்தான் பேச்சு நடத்த வேண்டும் என்றும், ஐரோப்பிய நாடுகள் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்றும், புலிகள் தொடர்பான இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருவது ஒரு சதி முயற்சியே. அப்படித்தான் நாங்கள் பார்க்கின்றோம்.

இன்று பேச்சுக்களின் அனுசரணையாளராக நோர்வே இருக்கிறது. பல ஐரோப்பிய நாடுகள் கண்காணிப்புப் பணியில் அங்கம் பெறுகிறார்கள். ஆகவே, ஐரோப்பிய நாடுகளின் பங்களிப்புடனும், ஈடுபாட்டுடனும் தான் இந்தச் சமாதான முன்னெடுப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் அவற்றைப் புறம்தள்ளி ஆசியநாடு ஒன்றில் தான் பேச்சு நடத்த வேண்டும். கண்காணிப்பாளராக ஐரோப்பிய நாட்டவர்கள் பங்குகொள்ள வேண்டும் என்ற குழப்பமான நிலைப்பாட்டை எடுப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

நோர்வேத் தரப்பிற்கு நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். பேச்சுவார்த்தை என்பது அனுசரணையாளர்களின் நடுநிலையோடு முன்னெடுக்கப்பட வேண்டும். குறிப்பாக, இப்போது யுத்த நிறுத்த நடைமுறைகளை அமுலாக்குவது பற்றி இரு தரப்பு உயர் மட்டக் குழுவும் உடனடியாக பேச வேண்டும். செயலிழந்து போகும் யுத்த நிறுத்த உடன்பாட்டை நாம் வலுப்படுத்த வேண்டும். அதற்கான ஆக்கபூர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முழு அளவில் நம்பிக்கை இழந்துபோயிருக்கும் மக்களை ஓரளவுக்காவது நம்பிக்கையூட்ட வேண்டும். இவற்றின் மூலம்தான் இன்றைய நிலைமையை ஓரளவிற்காவது சீர்செய்ய முடியும்.

இந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்த அமுலாக்கம் பற்றியதாகவும், ஐரோப்பிய நாடு ஒன்றில் குறிப்பாக, முதற்கட்டப் பேச்சுக்களை நோர்வேயில் நடத்தவும் நாம் விரும்புகின்றோம். இந்த நிலைப்பாட்டை எமது தலைமைப்பீடம் ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. அதில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த நாம் விரும்பவில்லை. இப்போது இலங்கை அரசாங்கம் இப்படியான அறிவிப்புக்களை செய்வது இதய சுத்தியுடனான அறிவிப்பா? என்ற கேள்வியை எழுப்புகின்றது.

ஏற்கனவே, நாம் எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியிருக்கின்றோம். இந்தக் கட்டத்தில் அரசாங்கம் ஐரோப்பிய நாடுகளிடம் புலிகளைத் தடைச் செய்யக் கோரும் கோரிக்கைகளை விடுத்து வருவதாக செய்திகள் கசிந்து வருகின்றன. ஆகவே, இதில் ஒரு பெரும் சதி இருப்பதாகத்தான் எமக்குத் தெரிகிறது.

எமது தாயகப் பிரதேசத்தில் இருந்து யுத்தத்தால் வெளியேற்றப்பட்ட ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழ்கிறார்கள். அதன் அடிப்படையில் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் எமது மக்கள் கணிசமான செல்வாக்கை செலுத்தி வருகின்றார்கள்.

இந்தக் கட்டத்தில் இலங்கை அரசாங்கம் எமக்கும் சர்வதேச சமூகத்திற்குமான உறவு நிலையைத் துண்டித்து எம்மைத் தனிமைப்படுத்த எடுக்கும் சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இப்படியான அறிவிப்பை அப்படித்தான் நாம் பார்க்கின்றோம். பேச்சுக்களில் இதயபூர்வமான உண்மையான அக்கறை இருக்குமாக இருந்தால் இப்படியான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டிய தேவை இவர்களுக்கு இல்லை. பல நாடுகளிலும் இந்தப் பேச்சுவார்த்தை நடத்திருக்கிறது. ஆகவே, ஐரோப்பிய நாட்டில் பேச்சுக்களை நடத்தாது ஆசிய நாட்டில் நடத்த வேண்டும் எனக் கோருவது பேச்சுவார்த்தை முயற்சியை இழுத்தடிக்க மேற்கொள்ளும் தந்திரோபாயமே என எமக்கு தோன்றுகிறது.

□ யசூசிஅகாசி இங்கு வராமை பற்றி?

சர்வதேச பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் எமது தாயகப் பிரதேசத்திற்கு வருவதை தடுப்பதென்பது உண்மையில் எங்களுக்கும் எமது மக்களுக்கும் கடந்த காலத்தை நினைவில் கொண்டு வருகின்றது. அவர்கள் இங்கு வருவதை தடுத்து நிலைமைகளை நெருக்கடிக்குள்ளாக்கி உலக நாடுகள் உண்மையை அறிய விடாதும் யதார்த்த நிலையை அறிவதை தடுத்து வருகிறார்கள். இதனை வைத்துப் பார்க்குபோது பாரிய நெருக்கடியையும் ஏற்படுத்தி இன அழிப்பு போரைக்கூட ஏற்படுத்த இவர்கள் துணிகிறார்களா? என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இந்தப் பின்னணியில்தான் நாம் சிந்திக்கின்றோம்.

இலங்கை அரசின் இத்தகைய சதி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் பலியாகிவிடக்கூடாது என்பது மக்களதும், எங்களதுமான வேண்டுதலாக இருக்கிறது. இங்கு ஒரு மக்களினம் வாழ்கிறார்கள். மிகுந்த மனிதாபிமான நெருக்கடிக்குட்பட்டு இருக்கிறார்கள். இருபது வருடப் போர் மற்றும் சுனாமி போன்றவற்றால் பாதிக்கப்பட்டு பெரும் அவல வாழ்வை சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையிலும் சர்வதேச உதவிகள் எதையும் பெறமுடியாது பெரும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இப்படியாக அவலப்பட்ட மக்களாக வாழ்ந்து சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை இழந்து விரக்தியின் விளிம்பில் நிற்கிறார்கள் எமது மக்கள். இவர்களை சர்வதேச பிரதிநிதிகள் கூட வந்து பார்த்து உண்மை நிலையை அறிவதை அரசு தடுப்பது அரசின் ஒரு பாரிய சதி முயற்சியே. அப்படித்தான் நாம் பார்க்கிறோம்.

இவர்களின் இந்த நடவடிக்கைக்கு சர்வதேச சமூகம் தொடர்ந்தும் இடம்கொடாது. இந்தச் சமாதான முன்னெடுப்புக்கள் கூட சர்வதேச சமூகத்தின் நடுநிலைப்போக்கு, அக்கறை, ஆதரவு என்பவற்றின் அடிப்படையில் தான் தமிழ் மக்கள் ஓரளவேனும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதைக்கூட சிறிலங்கா அரசாங்கம் தடுத்து நல்லெண்ண முயற்சிகளை உதாசீனப் படுத்துவதென்பது சமாதானத்தின் மீது அக்கறையின்றி மீண்டும் தமிழ் மக்கள் மீதான ஒரு இன அழிப்புப் போரை முன்னெடுக்கின்ற ஒரு சதியோ என்று அவர்களது இந்த நகர்வுகள் எம்மை சந்தேகிக்க வைக்கிறது.

□ பேச்சிற்கு வருமாறு அரசிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது. இதை நீங்கள் ஏற்கிறீர்களா?

அரசிடமிருந்து அழைப்பு வருவதற்கு முன்னரே நாம் இந்த அழைப்பை விடுத்திருந்தோம். அதாவது, யுத்த நிறுத்தத்தை செம்மையாக அமுல்படுத்தி நம்பிக்கையை கட்டியெழுப்பி மீண்டும் சமாதான சூழலை உறுதியாக்கிக் கொள்ள இருதரப்பு உயர்மட்டக் குழுக்களும் பேசவேண்டும் என்பது எமது நீண்ட காலக் கோரிக்கை.

இந்த நிலையில் அரச தரப்பில் இருந்தும் இதற்கு இணக்கப்பாடு தெரிவிப்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இந்த அறிவிப்பு உண்மையானதும் இதய சுத்தியுடனானதுமாக இருக்க வேண்டும். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற நடவடிக்கையாக இது அமைய வேண்டும். எமது எதிர்பார்ப்பும் அதுவே. இவர்களின் நிபந்தனைகள் என்பது காலத்தை இழுத்தடிக்கும் போக்காகத்தான் இப்பொழுது எம்மால் உணர முடிகிறது. உண்மையில் அவர்கள் இதய சுத்தியுடன் முன்வர வேண்டும். எமது எதிர்பார்ப்பு அதுவே.

□ சமாதான முயற்சிகளுக்கான இணைத் தலைமை நாடுகளில் ஏதேனும் மாற்றம் நிகழும் போல் தெரிகிறது. யப்பானிய இராஜதந்திரிக்கு வன்னி வருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் அழைப்பை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

எம்மைப் பொறுத்தவரையில் இரட்டை வேடம் போடும் போக்கை அனுமதிக்க முடியாது. ஒருபுறம் பேச்சு, சமாதான முன்னெடுப்புக்களைத் தொடர தாம் ஆர்வமாக இருப்பதாகக் காட்டிக்கொண்டு மறுபக்கம் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் இறங்கியிருப்பது எம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. ஒருவகையான சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஐரோப்பிய நாடுகள் புலிகளை தடைசெய்ய வேண்டும் என்றும் பேச்சுக்களை ஆசிய நாடுகளில் நடத்த வேண்டும் என்றும் சர்வதேசப் பிரதிநிதிகள், இராஜதந்திரிகளின் வன்னி வரவை தடுத்து நிறுத்துகின்ற இப்படியான முயற்சிகளை ஒன்று சேர்த்துப் பார்க்கின்ற பொழுது இலங்கை அரசாங்கம் நேர்மையான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

அதனடிப்படையில் இலங்கை அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றியமைக்க வேண்டும். சர்வதேச சமூகத்துடனான உறவுநிலையை வலுப்படுத்த இவர்கள் ஒருபோதும் தடையாக இருக்கக்கூடாது.

சர்வதேச சமூகம் தந்த நடுநிலைப் போக்கு, ஆதரவு என்பனதான் தமிழர் தரப்பை ஓரளவுக்கேனும் நம்பிக்கை கொள்ள வைத்தது. இதைத் தகர்த்தெறிதல் என்பது சமாதான நடவடிக்கைகளை முழுமையாக அழிக்கின்ற நடவடிக்கையாகவே அவர்களின் செயல்பாட்டை நாம் பார்க்கிறோம்.

□ இந்தியா இலங்கைக்கு இராணுவ ரீதியான போர் ஒத்திகைகள் வழங்கப்படுகிறது இதுபற்றி?

தமிழ் மக்கள் மீதான இலங்கைப்படைகளின், அரசின் கொடுமையான இன அழிப்பு, இராணுவ நெருக்குவாரங்கள் என்பவற்றை இல்லாமல் செய்கின்றபோதுதான் முழுமையான அமைதிநிலை தோன்றும். தமிழர் தாயகத்தில் ஏற்படும் அமைதிநிலைதான் இலங்கைத் தீவையே அமைதியான, சமாதானச் சூழலை உருவாக்கும். இராணுவ ரீதியாக இலங்கை அரசைப் பலப்படுத்துவது என்பது தமிழ் மக்களுக்கு எதிரான போக்கு.

தமிழ் மக்களின் பிரதேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அவல வாழ்வை திணித்துக்கொண்டிருக்கின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு துணை போவதாகத்தான் தமிழ் மக்கள் உணரத் தலைப்படுவார்கள். இப்பொழுது தமிழ் மக்கள் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துகிறார்கள்.

இந்தநிலையில் அனைத்து நாடுகளும் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகளை அவர்களுடைய உரிமைப் பிரச்சினையை தெளிவாகப் புரிந்து அதற்கமைவாக நல்லநிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இதுவே எமது நிலைப்பாடு.

□ யாழ். நிலைமை எப்படியுள்ளது? போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயல்பாடு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

யாழ் குடாவிலும் ஏனைய எமது தாயகப் பிரதேசத்தின் ஆக்கிரமிப்புப் பகுதிகளிலும் இராணுவக் கெடுபிடிகள் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. மக்கள் மீதான கைதுகள், சுற்றிவளைப்புகள், அச்சுறுத்தல், கொலைகள் என இராணுவம் யுத்தகாலம் போல தனது செயற்பாடுகளை முடுக்கிவிட்டிருக்கிறது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதுபற்றி மக்கள் பல இடங்களில் கோரிக்கைகளை விடுத்து வருகிறார்கள். நாமும் கண்காணிப்புக்குழு ஊடாக இதை வலியுறுத்தி வருகிறோம். அவர்களும் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தீவிரமாக முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையிலும் படைத்தரப்பின் அத்துமீறல்கள் தீவிரமடைந்து கொண்டிருக்கிறது. இது என்ன நிலைமையை கொண்டுவரப் போகின்றதோ என்பதை எம்மால் உணர முடியாதுள்ளது. இது ஆபத்தான நெருக்கடியான நிலையை கொண்டுவரும் என்றே நாம் சிந்திக்கிறோம்.

□ இந்த விடயத்தில் கண்காணிப்புக் குழுவின் பங்களிப்பு?

அவர்கள் பெரு முயற்சி எடுக்கிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிலைமை தீவிரமடைந்த பொழுது யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரையும் யாழ்படைத் தளபதியையும் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். ஆனால் அதனை இறுதி நேரத்தில் படைத்தரப்பு குழப்பிவிட்டது. இதனால் கண்காணிப்புக் குழுவின் முயற்சிகள் கூட தோல்வியடைந்துவிடுகிறன. இப்போதைய நிலைமை நெருக்கடியான ஆபத்தான நிலைமை.

□ இப்போதைய சூழலில் சிறிலங்காப் படைத் தளபதிகள், அரசியல் துறைப் பொறுப்பாளர்களைச் சந்திக்கமாட்டார்கள் என சிறிலங்காப் பிரதமர் கூறியிருக்கிறார். இந்த நிலையில் போர் நிறுத்தம் ஒருபக்கமாக மாத்திரம் நகர்கிறதா?

போர்நிறுத்த சூழல் ஊசலாடிக்கொண்டிருப்பதுபோலவே எமக்குத் தெரிகிறது.

முக்கியமான இத்தகைய சந்திப்புக்களை தவிர்த்திருப்பது இருதரப்பு உயர்மட்டக் குழுக்களும் பேசி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் உண்மையாக இருந்தால் அதை உடனடியாக நடவடிக்கைக்குக் கொண்டு வரவேண்டும். ஆனால் அதையும் தவிர்த்து இத்தகைய சந்திப்புக்களையும் தவிர்ப்பது எமக்கு பலத்த சந்தேகத்தையே ஏற்படுத்திவருகிறது.

□ வவுனியாவில் நடந்த இரண்டு கடத்தல் சம்பவம் தொடர்பாக உங்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது?

இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறுகின்ற கடத்தல், கொலை தொடர்பாக முழுப் பொறுப்பையும் எடுக்க வேண்டியவர்கள் சிறிலங்கா படைகளே. இது தொடர்பான எமது தெளிவான நிலைப்பாட்டை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

□ பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் ஆறு சுற்றுப் பேச்சுக்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் தான் முன்னெடுக்கப்பட வேண்டுமென புலிகள் முன் வைப்பார்களா?

பேச்சுக்களைப் பொறுத்த வரையில் முதல்கட்டப் பேச்சு அனைத்துக்கும் அடிப்படையாக இருக்கின்ற யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பானது. இதனை அமுல்படுத்துவது மிக அவசிய தேவையாக இருக்கிறது. இது தவிர்க்கப்படுமானால் அனைத்து முயற்சிகளும் சீர்குலைக்கப்படும் ஆபத்தான நிலையுள்ளது.

இந்த நிலையில் முதல் கட்டப் பேச்சுக்கள் என்பது யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றியதாகவே இருக்கும். அடுத்தகட்டங்கள் பற்றி பேச்சுக்களில் தீர்மானிக்கப்படும். இது அனுசரணையாளர்களின் ஒத்துழைப்புடன் இடம்பெறும்.

□ அம்பாறையில் இத்தாலிய பிரதிநிதி ஒருவர் பயணிக்க இருந்த உலங்குவானூர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டது பற்றி விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது?

இது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டு. இதுபற்றி நோர்வே தூதரகத்திற்கு நாம் தெரிவித்திருக்கிறோம். தமிழர் தரப்பின் உறவுநிலையை சர்வதேச சமூகத்திடம் இருந்து சீர்குலைக்க இலங்கை அரசு பெருத்த எடுப்பில் முயன்று வருவதையே இது காட்டுகிறது.

அதன் ஒரு கட்டமானதாகவே இந்த விடயத்தை கருத வேண்டியுள்ளது. உலங்குவானூர்தி எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் முன்னறிவிப்பைச் செய்து பலதடவை வந்து போயிருக்கிறது. இது எந்தவித முன்னறிவித்தலும் இல்லை. இதற்குள் இத்தாலிய உதவி வெளியுறவு அமைச்சர் பயணிக்கிறார் என்று எமக்கு அறியப்படுத்தப்படவில்லை.

இப்படியிருக்க அந்த உலங்கு வானூர்தி எமது பிரதேசத்துக்குள் வந்ததாகவும் அதனை நாம் தாக்கியதாகவும் இவர்கள் செய்தி ஒன்றைக் கசிய விட்டிருக்கிறார்கள்.

இது இலங்கை அரசின் திட்டமிட்ட ஒரு வேலையாகவே நாம் பார்க்கிறோம். அம்பாறை மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டில் அப்படி எதுவும் நடந்ததாக மாவட்டத் தளபதி மற்றும் நிர்வாகத்தினர் மறுத்திருக்கிறார்கள். இப்படி எதுவும் நடக்கவில்லை என்பதை எங்களுக்கு உறுதிப்படுத்திருக்கிறார்கள்.

இது ஐரோப்பிய நாடுகளுடனான உறவு நிலையை துண்டிப்பதற்கானதும் சர்வதேச சமூகத்துக்கும் தமிழர் தரப்புக்கும் இடையிலான இறுக்கமான உறவை சீர்குலைக்கின்ற சதிமுயற்சியாகத்தான் நாம் பார்க்கிறோம்.

ஐரோப்பிய நாடுகளை தடை செய்யுங்கள் என்கிறார்கள். இப்படியான செய்திகளை கசிய விடுகிறார்கள். இவை எல்லாம் எந்தப் பின்னணியில் நடைபெறுகிறது என்பது எமக்கு ஒரு கேள்வியை எழுப்புகிறது. திட்டமிட்ட நாடகமாகவே கருதுகிறோம்.

(லோ, தீ)

### சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

**ஈழநாதம்**
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 18.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சூழ்நிலை காரணமாக.....!

சிறிலங்காவின் புதிய அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டில் மாற்றம் செய்துள்ளது போன்று வெளிக் காட்டிக்கொள்ள முனைகின்றது. இது தொடர்பாக அறிவுறுத் தலாகவே யுத்த நிறுத்த உடன்பாட்டைத் திருத்தி அமைப்பது தொடர்பாக ஆசிய நாடு ஒன்றில் விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்குத் தயார் என அரசாங்கம் செய்த அறிவிப்பாகும்.

அரசாங்கத்தின் இவ் அறிவிப்பானது சமாதான சூழ்நிலையைத் தோற்றிவிப்பதில் அரசாங்கம் வெளிக்காட்டும் சமிக்ஞையாகப் பலரால் எடுத்துக்கொள்ளப்படலாம். ஒரு தரப்பில் இதனை ஏற்றுக் கொண்டு விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் என்ற கோரிக்கைகளும் ஏன் நிர்ப்பந்தங்களும் கூடக் கொடுக்கப் படலாம்.

ஆனால் எம்மால் உணரப்படும் வகையில் சிறிலங்கா அரசாங்கத்தின் இவ் அறிவிப்பானது சிறிலங்கா ஆட்சியாளர்கள் தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கான கால அவகாசம் பெறவே இதனை மேற்கொள்ள முற்பட்டுள்ளனர் என்பதே ஆகும். இதற்கு ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளையே எம்மால் சுட்டிக்காட்ட முடியும்.

சிறிலங்கா அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் சமாதான முயற்சிகள் தொடர்பாக தற்போதைய நிலைப்பாட்டைக் கொண் டிருக்கவில்லை. நோர்வேயை ஏற்பாட்டாளர் நிலையில் இருந்து வெளியேற்றி இந்தியாவை ஏற்பாட்டாளர்களாகக் கொண்டுவர எடுத்த முயற்[illegible]ந்த நிலையில் வேறு மார்க்கம் அற்ற நிலையிலேயே நோர்வேயை மீண்டும் அழைக்க அரசு முற்பட்டது.

நோர்வேயை அழைக்க முற்பட்ட விடயம் ஒரு புறம் இருக்கையில் சிறிலங்கா ஆட்சியாளர்களின் நகர்வுகள் பெரும் இராணுவ தயாரிப்புக்களுக்கு முற்படுவதையும் யுத்தம் ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு நிற்பதையுமே வெளிப்படுத்து பவையாக வுள்ளன.

குறிப்பாக சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களும் ஆயுதப் படைத்தரப்பிற்கென வரவு -செலவுத் திட்டத்தில் பெரும்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும், சுட்டிக்காட்ட முடியும். அதாவது ஆயுதப்படையை நவீனமாக்கு வதிலும், யுத்தத்திற்கு ஏற்ற வகையில் இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்வதிலும் அது முனைப்புக் காட்டுவதாய் உள்ளது.

எடுத்துக் காட்டாக சிறிலங்காப் படைத்தரப்பில் இன்றுள்ள தளபதிகளில் கடும் போக்காளர் எனப் பெயர் எடுத்த லெப். ஜெனரல் சரத்பொன்சேகா இராணுவத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளார். அவர் தமக்கு ஏற்ற வகையில் இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களைச் செய்துள்ளார். இதனால் பல உயர் இராணுவ அதிகாரிகளைக் கூட ஓரம் கட்டப்பட்டுள்ளனர்.

அடுத்ததாக இராணுவத்திற்கு வரவு- செலவுத்திட்டத்தில் பெருந்தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 9600 கோடி ரூபாக்கள் பாதுகாப்புப் படைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இது அடுத்த ஆண்டின் செலவீட்டில் 15 சதவீதம் எனவும், தகவல்கள் வெளியாகியுள்ளன. சுருக்கமாகக் கூறுவதாயின் 1998,1999 ஆண்டுகளில் மோசமான யுத்தங்கள் நடந்து கொண்ட காலத்தில் கூட இந்தளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக இல்லை.

இவற்றுக்கும் அப்பால், சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பு தமிழர் தாயகப் பகுதியில் முனைப்புப்படுத்தியுள்ள நடவடிக்கைகள் ஒரு புறத்தில், தமிழ் மக்கள் மீது ஒடுக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதாகவும், மறு புறத்தில் விடுதலைப்புலிகளுக்கும், சிறி லங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக் கையை மீறுவதான செயற்பாடாகவும் உள்ளது. அதாவது யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்று அமுலில் உள்ளதா என்ற கேள்வியை எழ வைக்கும் அளவிற்கு நிலைமையை மோசமடையச் செய்வதாகவுள்ளது.

இந் நிலையில் சிறிலங்கா அரசாங்கம் நோர்வே தரப்புடன் பேச்சுக்கள் நடப்பதாகக் கூறுவதிலும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்துவதற்குத் தயாராக இருப்பதாக,கூறுவதிலும் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும்? அதற்கும் அப்பால் அரசாங்கத் தரப்பு யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் திருத்தி அமைப்பது தொடர்பாகப் பேசத் தயாராக இருப்பதாகக் கூறுவதனால் என்ன பயன் ஏற்பட்டு விடப்போகின்றது? ஏனெனில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த திருத்தம் குறித்துப் பேசப்போவதில்லை என அறிவித்துள்ளனர்.

ஏனெனில் தற்போழுது உள்ள நெருக்கடிக்கு அமுலில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டை அரசாங்கத் தரப்பு உரிய முறையில் அமுல் செய்யாமையே காரணமாகும்.ஆகையினால் அமைதி திரும்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியது யுத்த நிறுத்தத்தை அமுலாக்குவது தொடர்பான பேச்சுவார்த்தையே ஒழிய யுத்த நிறுத்தத்தை திருத்துவதற்கான பேச்சுவார்த்தை அல்ல.

இந் நிலையில் ஒரு புறத்தில் அடக்குமுறையையும், யுத்தத் திற்கான பெரும் முழுத் தயாரிப்பிலும், ஈடுபட்டுள்ள சிறிலங்கா ஆட்சியாளர்கள் மற்றொரு புறத்தில் பலவீனமான முறையில் பேச்சுவார்த்தைகளுக்கான நடவடிக்கைகளையும், நிராரிக்கப்பட்ட விடயங்கள் பற்றியும் பேசப்போவதாகக் கூறுவதிலிருந்து மகிந்தராஜபகஷ அரசாங்கத்தின் கொள்கை எவையும், மாறியதாகக் கொள்ள முடியாது. இவை, தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப செய்யப்பட்டுள்ள தற்காலிக மாற்றமாகவே கொள்ளத்தக்கது.

# மகளுக்கு விசா அனுமதி கோரி முருகன் சிறையில் உண்ணாவிரதம்

(வேலூர்)

தன் மகளுக்கு விசா அனுமதிக்கக் கோரி, ராஜீவ் வழக்கில் வேலூர் சிறையிலுள்ள முருகன் கால வரையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார்.

ராஜீவ் வழக்கில் கைதாகி சிறையிலுள்ள முருகன் நளினி தம்பதியினருக்கு பூந்தமல்லி சிறையில் அரித்ரா என்ற பெண் குழந்தை பிறந்தது.

தற்போது அச் சிறுமி இலங்கையில் வசித்து வருகிறார். தற்போது 14 வயதை எட்டியுள்ள அரித்ரா தமது பெற்றோரைப் பார்க்க விரும்பினார்.

நீண்டநாள் முயற்சித்தும் இதற்கான விசா அவருக்கு இதுவரை அளிக்கப்படவில்லை.

இந்நிலையில் வேலூர் மத்திய சிறையில் உண்ணாவிரதத்தை முருகன் வியாழக்கிழமை தொடங்கினார்.

தனது மகளுக்கு விசா அளிக்கப்படும் வரை உண்ணா விரதத்தைத் தொடரப் போவதாக சிறை அதிகாரிகளிடம் அவர் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறினால் தமிழர்களுக்கு தனி வழிதான் உண்டு

- கூட்டமைப்பு பா.உ.ஜோசப் பரராஜசிங்கம்

இனப்பிரச்சினையை சிங்கள மக்கள் முன்வந்து தீர்க்க தவறும் நிலையில் தமிழ் மக்கள் தனி வழி யாகச் செல்வதே ஒரே வழியாக அமையும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில:

சிறிலங்கா சுதந்திரக்கட்சி,ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்தே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண் டும் என்று அன்று தொட்டு சுட்டிக் காட்டி வருகின்றோம். இரு பிரதான கட்சிகளும் ஒன்றிணையாது இனப் பிரச்சினைக்குத்தீர்வு காண்பது என்பது கடினமாகும். இருகட்சிகளும் இணைந்து தமிழர்களின் அபிலாசை களை நிறைவேற்றும் வகையில் தீர்வு காண முன்வர வேண்டும்.

இரு கட்சிகளும் சமாதான முயற்சியில் ஒன்றிணைவது வரவேற் கத்தக்கது. சமாதான முயற்சியை எதிர்க்கும் ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளை மகிந்த ராஜபக்ஷ புறந்தள்ளி விட்டு பேச்சுக்களை தொடங்க முன்வர வேண்டும். சிங்கள மக்கள் முன் வந்து இனப்பிரச்சினையைத் தீர்க்க தவறும் நிலையில் தமிழ்மக்கள் தனி வழியாக செல்வதே ஒரே வழியாக அமையும்.

57 ஆண்டுகளாக மாறி மாறி ஆண்ட இரு கட்சிகளும் தமிழர் தரப்புடன் ஒப்பந்தங்களையே செய்தன. ஆனால் எதுவும் நடை முறைப்படுத்தப்படவில்லை எனவே இனியாவது இதனை உணர்ந்து செயற்படவேண்டும்.சிங்கள தேசம் இனியும் தமிழர்களின் உரிமை யினை வழங்கத் தவறினால் தனியாக பிரிந்து செல்வதற்கு சர்வ தேச சமூகம் அங்கீகாரம் வழங்க வேண்டுமென்றார்.

# இனவாதிகளால் விலை பேசப்படுபவர்களாக மலையக சமூகம் மாறிவிடக் கூடாது

*மலையக மக்கள் முன்னணி தலைவர்*

விலை போகும் தரகர்களால் விலை பேசப்படும் சமூகமாக மலையகம் ஆகிவிடக்கூடாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் எச்சரித்துள்ளார்.

மலையகத்தில் சில தரகு தொழிற்சங்கவாதிகளின் செயற்பாடுகள் இனவாதிகளுக்கு துணை போவதாகவே அமைந்துள்ளது. ஆகவேதான் மலையக இனத்தைக் காக்கும் நோக்குடன் மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் சக்தியான அமைப்புக்களுடன் உறவை ஏற்படுத்துகின்றது.

தரகு தொழிற்சங்கவாதிகளின் நடவடிக்கைகளால் மலையகத்தில் மலையக மக்கள் மலையக சமூகத்தின் எதிர்காலத்திற்கு உத்தரவாதமற்ற நிலையே தோன்றும் முன்னணியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இன்று பலமிக்க அமைப்புகளாக இருக்கின்றன மலையக தமிழர்களின் இருப்பு இந்த இரு ஸ் தாபனங்களின் செயற்பாடுகளினால் தான் தீர்மானிக்கப்படுகின்றன. இந்த இரு அமைப்புக்களைவிடவும் மலையகத்தை நேசிக்கின்ற நேர்மையான சக்திகளும் இங்கு இல்லாமல் இல்லை. இந்நிலையில் மலையக மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சி அல்லது அரசியல் தெளிவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக இனவாத சக்திகளும் அவர்களுக்குத் தேவையான பதவி பணத்தை வழங்கி எம்மை கூறுபோடும் சதியை லாவகமாக செய்து வருகின்றனர்.

நமது சமுதாயம் பல கூறுகளாக பிளவுபட்டு பலவீனமடைந்ததும் வன்முறைகளுக்கும் இனவாதத் துக்கும் இந்த சக்திகள் தூபமிடலாம். எமது 15 இலட்சம் மக்களுக்கும் ஒரு உத்தரவாதமில்லாத நிலை தோன்றலாம்.

ஆகவேதான் மலையக மக்கள் முன்னணி எமது சகோதர அமைப்பான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பலவீனப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கின்றது. இ.தொ.கா பலவீனப்படுத்தப்படுவது என்பது மறுபக்கத்தில் மலையக சமூகம் பலவீனப்படுத் தப்படுகின்றது என்றே அர்த்தப்படும். மலையக மக்கள் முன்னணி பலவீனப்படுகின்றது என்றால் மறுபுறம் நல்ல சிந்தனைகள் பலவீனப்படுத்தப்படுகின்றது என்பதே அர்த்தமாகும்.

ஆகவே விலை போகும் தரகர்களினால் விலை பேசப்படும் சமூகமாக நாம் ஆகிவிடக்கூடாது விழிப்புணர்ச்சி கொண்ட சமுதாயத்தை அமைக்க வேண்டிய கடமையிலிருந்து இளைஞர்களே பின்வாங்கி விடக்கூடாது மலையகத்தை காக்க வேண்டிய எமது மக்களைக் காக்க வேண்டிய மலையகத்தின் சக்திமிக்க அமைப்புகளை காக்க வேண்டிய பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

# இராணுவ கோப்ரலின் மனைவி கழுத்துவெட்டி படுகொலை

(புத்தளம்)

புத்தளம் அநுராதபுரம் வீதியிலுள்ள 213 ஆம் படையணிக்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றில் படுகொலைச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளுக்கு தாயாரான 35 வயதுப் பெண் ஒருவர் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் புத்தளம் பொலிசாரினால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்ட பெண்ணின் கணவரான இராணுவ கோப்ரலும், அவரது இரு பிள்ளைகளும் வெளியே சென்றிருந்த பொழுதே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

தலைவெட்டப்பட்ட நிலையில் நிர்வாணமான நிலையிலேயே இந்த பெண்ணின் சடலம் இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். (32)

# சிறையில் பூத்த உணர்வின் ஒளி கவிதை தொகுப்பு வெளியீடு

(கிளிநொச்சி)

களுத்துறைச்சிறையிலுள்ள தமிழ்அரசியல் கைதி கல்லடி றொபேட்டின் "சிறையில் பூத்த உணர்வின் ஒளி"கவிதைத்தொகுப்பு வெளியீடு இன்றுமாலை 3.30மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு எழுகலை இலக்கியப் பேரவையின் தலைவர் பு.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறும். சிறப்புரையை தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் நிகழ்த்த உள்ளார். ஆய்வுரையினை தமிழீழவிடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் யோகரட்ணம் யோகி மற்றும் போராளியும் கலை இலக்கியப் படைப்பாளியுமான மலைமகள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். வெளியீட்டுரையினை எழுத்தாளர் திருமதி ஆதிலக்சுமி சிவகுமார் ஆற்றவுள்ளார். பதிலுரையை தமிழீழசட்டக் கல்லூரியின் பொறுப்பாளரும் சட்டவாளருமான க.ஜெகதீஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

### கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அனைத்து பல்கலைக்கழகங்களுக் கும் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான விசேட கலந்து ரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அனைத்து பல் கலைக்கழக மாணவர் ஒன்றிய அலு வலகத்தில் இன்று பகல் பத்து மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் பல்கலைக்கழகத் திற்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் வேண்டியுள்ளனர். (சோ)

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் 10 வருடங்கள் பணியாற்றியோர் கௌரவிப்பு

(விசுவமடு)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தில் பத்து வருடங்களுக்கு மேல்தொடர்ந்து கடமையாற்றிய பணியாளர்கள், போராளிகள் பொறுப்பாளர்களுக்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள்பரிசில்களை வழங்கி கௌரவித்துள்ளார்.




தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்விலேயே இவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் 11.00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியகத்தில் நடுவப்பணியக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ச.மதிவதனியின் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஏற்றி வைத்தார். தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மண்டபநிகழ்வுகள் ஆரம்பமானது. நிகழ்வில் கருத்துரையினை த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் மற்றும் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஆகியோர் வழங்கினார்கள். சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வழங்கினார். (46)

# வங்கக்கடலில் தாழமுக்கம்



நேற்று மாலை 3.00 மணிக்கு பெறப்பட்ட செய்மதிப்படம்

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழமுக்கம் இன்று திருகோணமலைக்கும் யாழ்ப்பாணத் துக்கும் இடையில் கரையைக் கடக்க வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கு நேராக 150 முதல் 200 கிலோ மீற்றர் தொலை வுக்கு காற்றழுத்த தாழமுக்கம் நகர்ந்துள்ளது.

இது சூறாவளியாக மாறி இன்று யாழ்ப்பாணத்துக்கும் திருகோண மலைக்குமிடையில் கரையைக் கடக்கக்கூடும் என்று கொழும்பு வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவிக்கின்றது.

இந்தத் தாழமுக்கம் தற்போது வடமேற்காக கரையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு கடல் கொந்தளிப்புடன் இருக்கும் என்றும், மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

கடலில் காற்றின் வேகம் மணிக்கு 80 முதல் 100 கிலோ மீற்றர்கள் வரை அதிகரிக்கும். அடுத்த 24 மணி நேரத்துக்கு கன மழைப் பொழிவு இருக்கும் என்றும் எச்சரிக்கைப்பட்டுள்ளது.

# உலங்குவானூர்தி மீதான தாக்குதல் புலிகளே பொறுப்பேற்க வேண்டும்

## கண்காணிப்புக்குழு கூறுகின்றது

விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலுக்கான பொறுப்பை தமிழீழ விடுதலைப் புலிகளே ஏற்கவேண்டும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

இது போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் எனவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

கடந்தசெவ்வாய்க்கிழமை அறுகம்பையில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பான விசாரணையின் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லண்ட் நேற்றுக்காலை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருக்க விடுதலைப்புலிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.பல்கலை மருத்துவபீட வெள்ளிவிழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவப்பீட வெள்ளிவிழா நிகழ்வு நேற்று மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் த.காண்டீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் ஆசியுரையினை நல்லைக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிக சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்தினார்

சிறப்புரையை பல்கலைக்கழகத்தின் முதல் அணியின் மாணவனும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும் போதனை வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணருமான எஸ் ஜெயரெத்தினம் நிகழ்த்தினார். வெள்ளி விழா மலரினைவைத்திய கலாநிதி கௌரி செல்வரெட்ணம் வெளியிட்டு வைக்க, பேராசிரியார் வைத்திய கலாநிதி சிவகுலசூரியா பெற்றுக் கொண்டார்

நாடி இதழினை வைத்திய கலாநிதி எஸ் ஜெயரெட்ணம் வெளியிட்டு வைக்க, அதனை பேராசிரியர் சிவகுலசூரியா பெற்றுக் கொண்டார். அடுத்து சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட முன்னாள் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவரும் தற்போதைய விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி இ.இராஜேந்திரப் பிரசாத் தற்போதைய மருத்துவ பீடத் தலைவர் வைத்திய கலாநிதி க.சிவபாலன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நாடி நூலின் விமர்சனத்தை கவிஞரும் பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளருமான சோ.பத்மநாதன், யாழ்ப்பாணம் காசநோய் வைத்தியசாலையின் பொறுப்பாளர் வைத்திய கலாநிதி சி.யமுனாநந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். (41)

# புத்தளம் பகுதியில் எலும்புக்கூடு மீட்பு

(புத்தளம்)

புத்தளம் நகரிலிருந்து கொழும்பு வீதியில் 500 மீற்றர் தொலைவில் காணப்படும் இலங்கை மின்சார சபையின் காரியாலயத்துக்கு அருகில் மனித எலும்புக் கூடுகளை புத்தளம் பொலிசார் மீட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிசார், மண்டை ஓடு மற்றும் எலும்புக் கூடுகளை கண்டெடுத்ததுடன், இதனுடன் காணப்பட்ட வெள்ளை நிற சாரம் ஒன்றையும் அவர்கள் எடுத்துள்ளனர்.

இந்த எலும்புக் கூடுகள் எவ்வாறு இங்கு வந்தன என விசாரணைகளை ஆரம்பித்துள்ள புத்தளம் பொலிசார் இரண்டு மாதங்களுக்கு முன்பு புதைக்கப்பட்ட சடலமொன்றின் எலும்புக்கூடாக இருக்கலாமென சந்தேகின்றனர். (32)

# வாழைச்சேனையில் அழுகிய நிலையில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் அழுகிய நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப் பட்டுள்ளது. வாழைச்சேனை நாககீவன் பகுதியிலேயே இச்சடலம் மீட்கப் பட்டுள்ளது.

இச்சடலம் நாககீவன் ஆற்றுக்கும் கடற்கரைக்குமிடையில் காணப் பட்டது.

அப்பகுதியால் சென்றவர்களினால் அவதானிக்கப்பட்டு பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டு மீட்கப் பட்டுள்ளது. 25 வயது தொடக்கம் 30 வயது வரை மதிக்கப்படும் இப்பெண்ணின் சடலம் வாழைச்சேனை மருத்துவமனையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள வாழைச் சேனைப் பொலிசார் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் குறித்த அகவையுடைய பெண் எவரும் காணவில்லைஎன முறைப்பாடுகள் எதுவும் கிடைக்காததினால் அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

## 2ஆம்..

விளங்காத விடயத்தை உனக்கு புரியும் மொழியில் சொல்ல வேண்டிய நிலைக்கு எம்மை நிர்ப்பந்தித்துக் குள்ளாக்கியுள்ளீர்கள்.

சிங்கள கூலிப்படைகளே கண்டியிலும் காலியிலும் மாத்தறையிலும் அம்பாந் தோட்டையிலும் பிறந்த உனக்கு எமது பிரதேசத்தில் என்ன வேலை. நீ உனது ஊருக்குத் திரும்பிச் செல். திரும்பிச் செல்ல வழி தெரியாவிட்டால் இங்கு செத்து மடி.

தமிழ் மக்கள் உனது அடிமைகள் அல்ல. தேவை ஏற்படின் கையில் ஆயுதம் ஏந்தும் மானமுள்ள மறவர் படை என்பதைப் புரிந்து கொள். தமிழர்கள் மானமுள்ளவர்கள் வீரமுள்ளவர்கள் வேட்டொலிகளும் குண்டுச் சத்தங்களும் எமக்கு ஒன்றும் புதிதல்ல.

எம்மை சீண்டிப்பார்த்து எம்மீது அழுத்தங்களை திணிக்க முற்படுவாயானால்தமிழர் பிரதேசத்தின் மண்ணிற்கு நீ இரையா வாய். என மக்கள்படை தெரிவித்துள்ளது. (28)

## சித்தியடைந்த..

கள் சுற்றுலா பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ மாணவர் அமைப்பின் நடுவப்பணியகத்துக்கும் பயணம் செய்தனர்.

அங்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இந்த மாணவர்களை சந்தித்து உரையாடியதுடன் தனது பாராட்டுக்களையும் தெரிவித்து பரிசில்களையும் வழங்கினார்.

## புதிய...

இந்தக் காலகட்டத்தில் மேற்கொண்டதன் நோக்கம் என்ன? எனக்கேட்ட போது

சிறுபான்மைக் கட்சிகள் ஒன்றிணை வதை எப்போதாவது தொடங்க வேண்டும் என்றில்லை. யாராவது ஒருவர் தொடங்க வேண்டும் என்பதால் இந்த முயற்சியில் ஈடுபட்டேன். சிங்கள மக்கள் இன்று ஒன்றாகி நிற்கின்றார்கள். அதனால் தமிழ்மக்களாகிய நாம் பிரிந்து நிற்பது நல்லதல்ல. மலையகப் பிரச்சினை வேறு. வடகிழக்குப் பிரச்சினை வேறு.இப்போது ஒன்றிணைவோம். எங்கள் பிரச்சினைகளை பின்னர் தீர்த்துக்கொள்வோம். சிங்கள இனவாதம் இப்போது அதிகரித்து வருகிறது. எமது சுதந்திரம் பறிபோகிறது. தமிழ்மக்கள் முழுச் சுதந்திரத்துடன் வாழ்வதானால் ஒன்றுசேர வேண்டும்.

இப்போதைய அரசின்போக்கு வேறுபட்டது. மலையகப் பகுதிகளில் இப்போது நிலைமை மோசமடைந்து செல்கின்றது.மக்கள் சுதந்திரமாக எதனையும் செய்யமுடியாத நிலை உள்ளது. இனவாதம் வளர்ந்து வருகிறது என்றார்.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் இன்று சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசவுள்ளார்.

ஆறுமுகன் தொண்டமான் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்த வேளை தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கி செவ்வியின் போதே இதனைத் தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை இனப்பிரச்சினைக்கு நடுநிலைமை வகிப்பதற்கு சிங்கள மக்கள் பெரும்பாலானோர் இந்தியாவை விரும்புவதாகக் கூறுகின்றனரே எனக் கேட்கப்பட்டபோது,

ஆறுமுகன் தொண்டமான் பதிலளிக்கையில், இந்தியாவை ஆதரிப்பதென்பது பொய்யானது எல்லோரையும் இழுத்து விட்டு காலம் கடத்தி அவர்கள் தங்களை தயார்ப்படுத்தவே இதைக் கூறுகின்றனர். எனவே, இந்தியாவை விரும்புகின்றனர் என்பது பொய்யானது. ஏற்கனவே நோர்வே இப்பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டிருந்தது. அவர்களை தொடர்ந்து பேசவிட வேண்டும்எனத் தெரிவித்தார்.(வோ.தீ)

# சாவு அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கணேசன்

**(துன்னாலை மத்தி,கரவெட்டி)**

கோயிற்கடவை துன்னாலை மத்தி,கரவெட்டியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணே சன் அவர்கள் 16.12.2005 (நேற்று )வெள்ளிக்கிழமை இரவு இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சின்னம்மா ஆகியோரின் அன்புமகனும், காலஞ்சென்ற வல்லிபுரம் தெய்வானை ஆகியோரின் அன்புமருமகனும், மகேஸ்வரியின் அன்புக்கணவரும், மகேசன் (இளைப்பாறிய கல்வி அதிகாரி), செல்வவிநாயகம், குணவதி (இளைப்பாறிய ஆசிரியை), குகவதி, விமலை, கதிரவேலு (ஆசிரியர் வசாவிளான் ம.ம.வி), கமலாதேவி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சைவசிகாமணி (எழுதுவினைஞர்), சைவஇறைமணி(ஆசிரியர்), காலஞ்சென்ற சைவகலைஞன் மற்றும் சிவகுமாரன் (தாதியர் உத்தியோகத்தர்), திருமாலழகன் (ஆசிரியர் உரும்பிராய் இந்துக்கல்லூரி-வலம்புரி நாளிதழ் இயக்குநர் சபை), யசோதை (தாதியர் உத்தியோகத்தர்), வியாசர்மணி, வனிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானாமிர்தம் (ஆசிரியை), அனுசுபவாணி (தாதிய உத்தியோகத்தர்), கௌசல்யா, சந்திரமௌலீஸ்வரன் (தாதியர் உத்தியோகத்தர்), சுகந்தி,குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுபவாசினி,சுபாங்கி, திசாந்தன்,சங்கவிதா, பிரணவன், சாரங்கன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.12.2005 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் துன்னாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துன்னாலை வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோயிற்கடவை,*
*துன்னாலை மத்தி, கரவெட்டி* (சி:3578)

**தகவல்:-**
**க.சிவகுமாரன்**
**(மகன்)**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.